பக்கங்கள்: பத்து
Registered as a News paper in Sri Lanka

பொது சன நூலகம்

# வலம்புரி

# VALAMPURI

விலை ரூபா.7.00

சங்கு 05 வள்ளுவர் ஆண்டு 2035 தை 12 திங்கட்கிழமை (26-01-2004) தொலைபேசி - 2223378 ஒலி 38

ராம்கோ
சிமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில்
முதலாம் தரத் தொழிற்சாலையில்
இருந்து தயாரிக்கப்பட்டது.




தமிழீழ சட்டக் கல்லூரியில் பயின்று பயிற்சியை முடித்துக் கொண்ட சட்டவாளர்களுக்கு நேற்றைய தினம் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவின் சில காட்சிகள்

## எமது தமிழீழ தேசத்தில்

# சட்டம், ஒழுங்கை பாதுகாக்கவே நீதித்துறை உருவாக்கப்பட்டது

## பட்டமளிப்பு விழாவில் தமிழ்ச்செல்வன் உரை

(கிளிநொச்சி)

**இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களை சிங்களப் பேரினவாதம் அழித்தொழிப்பதற்கான சட்டங்களை உருவாக்கிய வேளையில் தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் தீர்க்கதரிசனமான சிந்தனையில் உருவாக்கம் பெற்றதே தமிழீழ நீதி நிர்வாகத் துறையாகும்.**

**இத்துறையை தலைவர் எந்த நோக்கத்தோடு உருவாக்கினாரோ அந்த நோக்கமும் எதிர்பார்ப்பும் கடந்த பத்து ஆண்டுகளில் நிறைவேறி பெரு வளர்ச்சி கண்டுள்ளது. இவ்வாறு அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல்வன் தெரிவித்துள்ளார்.**

தமிழீழ சட்டக் கல்லூரியில் இருந்து வெளியேறும் 4வது தொகுதி சட்டவாளர்களின் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றும் போதே சு.ப.தமிழ்ச்செல்வன் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி தமிழீழ நீதிமன்ற வளாகத்தில் நேற்று முற்பகல் 10.00 மணிக்கு தமிழீழ நீதி நிர்வாகத் துறைப் பொறுப்பாளர் பரா தலைமையில் இவ் வைபவம் நடைபெற்றது.

இவ் வைபவத்தில் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சுபதமிழ்ச் செல்வன் தொடர்ந்து சிறப்புரையாற்றுகையில்;

தமிழீழ தேசத்தில் எமது கட்டுப் பாட்டுக்குள் உள்ள, எங்களால் விடுவிக் கப்பட்ட பிரதேசங்கள் தோறும் எமது நீதி நிர்வாகத்துறை விஸ்தரிக் கப்பட்டு சேவையாற்றி வருகிறது.

சட்டம் ஒழுங்கைப் பேணுகின்ற எமது நீதித்துறையும் காவல்துறையும் எல்லோராலும் புகழப்பட்டு வருகிறது. முக்கியமாக எமது எதிரியானவர்களாலேயே புகழ்ந்து பேசப்பட்டு வருவது குறிப்பிடத்தக்க அம்சமாகும். வன்னிக்கு வந்து எம்மைச் சந்தித்துச் செல்லும் சர்வதேச பிரதிநிதிகள கூட எமது நீதி நிர்வாகக் கட்டமைப்பு காவல்துறை பற்றி மிகவும்புகழ்ந்து பாராட்டியுள்ளனர்.

தேசியத் தலைவர் என்ன நோக் கத்தின் அடிப்படையில் நீதி நிர்வா கத் துறையை கட்டி எழுப்பினாரோ அந்த நோக்கததை நிறைவு செய்து

(10ம் பக்கம் பார்க்க)

## மிலேனியம் சிற்றி விவகாரம்

# இராணுவ உயரதிகாரிகள் மூவர் சேவையிலிருந்து நீக்கம்

(கொழும்பு)

மிலேனியம் சிற்றி இராணுவ ஆயுதக் களஞ்சியம் மீது மேற்கொள்ளப் பட்ட திடீர் சோதனை பற்றிய தகவல களை வெளியிட்ட இராணுவ உயர் அதிகாரிகள் சேவையில் இருந்து நீக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு

மேஜர் அபிக் கருணாநாயக்கா உட் பட மூன்று இராணுவ உயர் அதிகாரிகளே இவ்வாறு சேவையில் இருந்து நீக்கப்பட்டதாகவும், ஏனைய வர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நட வடிக்கைகளை எடுக்கப் போவதா

கிளிநொச்சி தமிழீழ நீதிமன்ற வளாகத்தில் நேற்று முற்பகல் 10.00 மணிக்கு தமிழீழ நீதி நிர்வாகத் துறைப் பொறுப்பாளர் பரா தலைமையில் இவ் வைபவம் நடைபெற்றது.

இவ் வைபவத்தில் தமிழீழ எமது நீதி நிர்வாகத்துறை விஸ்தரிக்கப்பட்டு சேவையாற்றி வருகிறது.

சட்டம் ஒழுங்கைப் பேணுகின்ற எமது நீதித்துறையும் காவல்துறையும் எல்லோராலும் புகழப்பட்டு வருகிறது. முக்கியமாக எமது எதிரியானவர் பாராட்டியுள்ளனர்.

தேசியத் தலைவர் என்ன நோக்கத்தின் அடிப்படையில் நீதி நிர்வாகத் துறையை கட்டி எழுப்பினாரோ அந்த நோக்கததை நிறைவு செய்து (10ம் பக்கம் பார்க்க)

(கொழும்பு)

மிலேனியம் சிற்றி இராணுவ ஆயுதக் களஞ்சியம் மீது மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனை பற்றிய தகவலகளை வெளியிட்ட இராணுவ உயர் அதிகாரிகள் சேவையில் இருந்து நீக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் அறிவித்துள்ளார்.

கேணல் பராக்கிரம திஸாநாயக்கா, மேஜர் அபிக் கருணாநாயக்கா உட்பட மூன்று இராணுவ உயர் அதிகாரிகளே இவ்வாறு சேவையில் இருந்து நீக்கப்பட்டதாகவும், ஏனையவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுக்கப் போவதாகவும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார். (10ம் பக்கம் பார்க்க)

## புலிகளுடன் பேசுவது பற்றி

# ஸ்ரீ.சு.க. - ஜே.வி.பி கூட்டு முன்னணி

# நாளை கொழும்பில் கூடி ஆராயும்

(கொழும்பு)

புதிதாக உருவாக்கப்பட்ட ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி-ஜே.வி.பி கூட்டணி தமது எதிர்காலத்திட்டங்கள் குறித்து கலந்துரையாடுவதற்காக நாளை செவ்வாய்க்கிழமை கொழும்பில் முக்கிய கூட்டமொன்றை நடத்தவுள்ளன.

மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்காக புலிகளின் நம்பிக்கையை எவ்வாறு பெறுவது என்பது பற்றி இதில் கலந்துரையாடப்படவுள்ளது. கடந்த வாரம் ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா புதிதாக அமைக்கப்பட்ட இக்கூட்டணி புலிகளுடனான பேச்சுக்களுக்கு தயார் செய்வதாகவும் ஆனால் தாம் நாட்டை புலிகளுக்கு விற்கப்போவதில்லை என்றும் கூறினார்.

மேலும் ஜனாதிபதி கடந்த காலங்களில் இவ்வாறான 3 கூட்டணிகளை உருவாக்கியிருந்தார். ஆனால் (10ம் பக்கம் பார்க்க)

# மோட்டார் சைக்கிள்—கார் விபத்து

# சிறுமி உட்பட மூவர் படுகாயம்

## நெல்லியடியில் சம்பவம்

(மருதங்கேணி)

மோட்டார்சைக்கிளும் காரும் ஒன்றுடன் ஒன்று நேருக்குநேர் மோதி விபத்துக்குள்ளானதில் 8 வயது சிறுமி உட்பட மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

நெல்லியடிச் சந்திக்கு அருகில் நேற்று மு.ப.11.30 மணியளவில் இவ் விபத்துச் சம்பவம் இடம்பெற்றது. சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த மண்டான் கரணவாயைச் சேர்ந்த நல்லதம்பி பகவதி (வயது 35), கதிர்காமம் வேலும்மயிலும் (வயது 35) வேலும்மயிலும் தர்வினா (வயது 8) ஆகிய மூவருமே படுகாயமடைந்தவர்களாவர்.

படுகாயமடைந்த மூவரும் உடனடியாக மந்திகை வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப்பிரிவில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். தலையில் பலத்த காயங்களுக்குள்ளான பகவதி என்பவா யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். (10ம் பக்கம் பார்க்க)

# பெப்ரவரி 17ந் திகதிக்கு முன்னதாக

# மூன்று முக்கிய அமைச்சுக்களை

# ஜனாதிபதி ஒப்படைக்க வேண்டும்

## பிரதமர் ரணில் கோரிக்கை

(அநுராதபுரம்)

இலங்கைக்கு உதவி வழங்கும் சர்வதேச நாடுகளின் மாநாடு அடுத்த மாதம் 17ம் திகதி வாஷிங்டனில் நடைபெற விருப்பதால் அதற்கு முன்பாக தற்போதைய அரசியல் நெருக்கடிகளுக்கு தீர்வு காணப்படவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று மாலை தெரிவித்துள்ளார்.

அநுராதபுரம் கொறவப்பொத்தானையில் நடைபெற்ற மக்களுடனான சந்திப்பில் உரையாற்றும் போதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்;

தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு காணப்பட வேண்டுமானால் ஜனாதிபதி பொறுப்பேற்ற மூன்று அமைச்சுக்களையும் அடுத்த மாதம் 17ம் திகதிக்குள் அவர் மீண்டும் எம்மிடம் ஒப்படைக்க வேண்டும். அமைச்சுப் பொறுப்புக்களை அவர் மீண்டும் ஒப்படைக்காது போனால் பல்வேறு (10ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ஸ்ரீ.சு.க-ஜே.வி.பி.கூட்டை எதிர்த்து

# தமிழர் ஆர்ப்பாட்டங்களை நடத்த வேண்டும்

## கிருஷ்ணபிள்ளை எம்.பி.அறைகூவல்

(கொழும்பு)

சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்குத் தடையாக இருந்து வந்த ஜே.வி. பிக்கும்,ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையே தற்போது ஏற்பட்டுள்ள கூட்டு முன்னணியை எதிர்த்து ஆர்ப்பாட்டங்களை நடத்துவதற்கு சகல தமிழ் மக்களும் முன்வர வேண்டும்.

அதுமட்டுமன்றி சகல தமிழ்க் கட்சிகளையும் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் மக்கள் இதற்கான அழுத்தங்களையும் கொடுத்து ஊக்கம் கொடுக்க வேணடும் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பினைசசேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் வெ.கிருஷ்ணபிள்ளை தெரிவிததுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கும்-ஜே.வி.பிக்கும் இடையே ஏற்பட்டுள்ள கூட்டு முன்னணியை எதிர்த்து தமிழத்தேசியக் கூட்டமைப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்துமா? என்பது குறித்து ஊடகம் ஒன்றிற்கு கருத்துத தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

மக்களின் அழுத்தம் இருந்தால் நிச்சயமாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எதிர்ப்புப் போராட்டங்ளை நடத்தும்.

இதேவேளை,இக்கூட்டமைப்பை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவும் தேசிய ஐக்கிய முன்னணித் தலைவி பேரியல் அஷ்ரப்பும் வரவேற்றிருக்கின்றனர்.

இவர்களின் இத்தகைய செயற்பாடு மக்கள் மத்தியில் பெரும் அதிருப்தியையும் விசனத்தையும் ஏற்படுத்தி இருக்கின்றது.தமிழ் மக்களுக்கு உரிமைகள் எதையும் கொடுக்கக் கூடாது,அவர்களைப் பூண்டோடு அழிக்கவேண்டும்என கூறி வந்த இனவாத சக்தியை எதிர்த்து நிறகாது,அவர்களின் செயற்பாட்டை வரவேற்றுள்ள இவ்விருவரும தமிழ் மக்களின் சீற்றத்திற்கு ஆளாகுவதுடன் அவர்களுக்கு துரோகஞ் செய்கின்றார்கள என்றே கூறவேண்டும்.

முன்னர் விடுதலைக்காக போராடி வந்த டக்ளஸ்தேவானந்தா இன்று விடுதலையை எதிர்த்து பேரினவாத சகதிகளோடு இணைந்து இத்தகைய கீழ்த்தரமான செயல்களில் ஈடுபடுவது மிகுந்த வேதனையைத் தருகின்றது.

எனவே, மதிப்புக்குரிய டக்ளஸ தேவானந்தாவுக்கு நான்கூற விரும்புவது என்னவென்றால், எமக்குள்ளே இருக்கும் கருத்து முரண்பாடுகளை மறந்து மறப்போம், மன்னிப்போம் என்ற வாக்கியத்திற்கு அமைய பழையதை மறந்து,மன்னித்து தமிழ் மக்களுக்கு ஒரு விமோசனத்தைப் பெற்றுக்கொடுப்பதற்காக அவர்களிடையே ஓர் அமைதியை உருவாக்குவதற்காக பாடுபடவேண்டும்.

இதற்கிடையில் களுத்துறை உட்பட பல சிறைச்சாலைகளில் சுகாதரச்சீர்கேடுகள் நிலவுவதால் அங்கு சிறை வைக்கப்பட்டுள்ள தமிழர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி தொற்று நோய்களுக்கு ஆளாகுவதுடன் பல தமிழ்க் கைதிகள் மனநோயால் பீடிககப்பட்டுள்ளனர்.இவர்களை விடுதலை செய்வதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என சில குற்றச்சாட்டுக்கள் எழுந் திருக்கின்றன.

என்னைப்பொறுத்தவரையில் நான் பல தடவைகள் மேற்படி சிறைச்சாலைகளுக்கு சென்று அங்குள்ள நிலைமைகள் குறித்து சம்பந்தப்பட்டவர்களின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளேன். நான் மட்டும் இவ்வாறு பாடுபடுவதால் பிரயோசனமிருக்காது.அனைத்துத் தமிழ்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் இவ்விடயத்தில் அக்கறை காட்டவேண்டும்.

இவைதவிர சமாதானம் என்பது தமிழ் மக்களுக்காகவே ஏற்படுத தப்படுவதாக பேரினவாத அரசியல் கட்சிகள் கூறி வருகின்றன. இதனை நான் முற்று முழுதாக நிராகரிக்கின்றேன்.

ஏனெனில்,சமாதானத்தால் நன்மை அடைந்தவர்கள் பெரும்பான்மை இனத்தவர்களான சிங்களவர்களும்,முஸ்லிம்களுமே.

அவர்கள் இன்று வடக்கு-கிழக்கு மாகாணத்திற்கு எவ்வித அச்சமுமின்றி சென்று வருகின்றார்கள். ஆனால் எமதுமக்கள் தென்னிலங்கையில் இன்றும் அச்சத்துடனேயே வாழகின்றனர் என்றார். (உ-61,10)

---

## சிறுவிளம்பரம்

### தவறவிடாதீர்!!!

2004 உங்களுக்கு எப்படி? அழகியல் தரம்1-5வரை(ஆததிசூடி, கொன்றை வேந்தன் அடங்கியுள்ளது). ஆசிரியர் போட்டிப்பரீட்சைக்கு பொதுஅறிவு உளச்சார்பு மொழிததிறன் - அடங்கிய தகவல் தடாகம்,பொது அறிவு-கொள்ளை மலிவு. உங்கள் எதிர் காலம் பற்றி சிந்திக்கும் வேளையில் சந்தித்துப் பாருங்கள். உங்களுக்குப் பொருத்தமான மணமக்களைத் தேடித் தர தொடர்பு கொள்ளுங்கள்.ஆங்கிலத்தில் '50 கட்டுரைகளும் வெளிவந்துள்ளன V.A.சிவராசா இல 01,பழம் றோட் கந்தர்மடம் யாழ்ப்பாணம்.எங்கும் விற்பனையாகின்றது. (8167)

### நேர்முகத் தேர்வு

(யாழ்ப்பாணம்)

வேலை வாய்ப்பற்றிருக்கும் இளைஞர் யுவதிகளிற்கு தொழில் வாய்ப்பினை வழங்கும் நோக்கில் தொழில் துறைத் திணைக்கள யாழ். மாவட்ட அலுவலகத்தினால் கோரப்பட்டிருந்த ஆடைத் தயாரிப்பு பயிற்சிக்கு விண்ணப்பித் தவர்களுக்கான சேர்முகத் தேர்வு நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு சுன்னாகத்தில் உள்ள ராஜா கொம்பிளெக்ஸ் கட்டடத்தில் நடைபெறவுள்ளது. (உ)

### விளையாட்டுப் போட்டி

(திருநெல்வேலி)

குடத்தனை அரசினர் தமிழ்க் கலவன் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி எதிர்வரும் 30ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப. 200மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியால அதிபர் கே.கே.யோகராஜன் தலைமையில் நடைபெறவுள்ள .இந்நிகழ்வில் பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி சி. கதிரவேற்பிள்ளை பிரதம விருந்தினராகவும் வடமராட்சி கல்வி கழகப் பொறுப்பாளர் கி.தாயகன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (தி-43)

### மிதிவெடி அபாயக்கல்வி

(மருதங்கேணி)

வடமராட்சி கல்வி வலய மருதங்கேணி கல்விக்கேட்டத்திலுள்ள 11 பாடசாலைகளில் தரம்! முதல் தரம்5 வரையான வகுப்புக்களில் மேலதிக பாடத்திட்டமாக மிதிவெடி அபாயக்கல்வி அறிமுகப்படுத்தப் படவுள்ளது. (உ-35)

---

### விடுதலைப்புலிகளுக்கு

## இரகசியக் கடிதங்களை ஜனாதிபதி அனுப்பவில்லை

### செயலகம் மறுப்பு

(கொழும்பு)

இடைநிறுத்தப்பட்ட சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்கும் பொருட்டு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தமிழீழ விடுதலைப புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுககு இரகசியக் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார் என ஊடகங்களில் வெளியான செய்தியினை ஜனாதிபதி செயலகம் மறுத்துள்ளது.

இவ்விடயம் குறித்து செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் பொறுப்புவாய்ந்த ஊடகங்கள் இவ்வாறான பொய்களையும் வதந்திகளையும் மக்களுக்குக் கூறி வருவதையிட்டு கவலையடைய வேண்டியுள்ளது.

ஊடகங்களின் தவறான பிரசாரம் காரணமாக சில உண்மைகள் முற்று முழுதாக மறைக்கப்பட்டு விடுகின்றன.

இவ்வாறானதொரு செய்தியினையே "லங்கா தீப" உட்பட அனைத்துச் செய்தி நிறுவனங்களும் வெளியிட்டுள்ளன.

பேச்சுவார்த்தைகள் ஜனாதிபதி தலைமையில் மீண்டும் ஆரம்பிக்கப் படுமானால் அதற்கான அழைப்பை புலிகளின் தலைவருக்கு ஜனாதிபதி நேரடியாகவே விடுப்பார்.

மாறாக இவ்வாறான இரகசியக் கடிதங்களை அவர் அனுப்ப வேணடிய அவசியம் இல்லை என அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிட ப்பட்டுள்ளது. (தி-61)

---

## மேல்மாகாண அதிகாரிகளின் மோசடி வெளிச்சத்துக்கு

(கொழும்பு)

போலி ஆவணங்களைச் சமர்ப்பித்து உயர் பதவிகளில் இருக்கும் அதிகாரிகள் மீது கல்வி நிர்வாக சேவை அமைச்சு விசாரணைகளை மேற்கொண்டுள்ளது.

கல்வி நிர்வாக சேவை அமைச்சின் கீழ் உயர் பதவிகளில் இருக்கும் பல அதிகாரிகள் போலி ஆவணங்களை சமர்ப்பித்தே பதவிகளுக்கு வந்திருப்பதாக குற்றம்சாட்டப்பட்டு வருகிறது. இது தொடர்பாக அமைச்சிற்கு கிடைத்த முறைப்பாடுகளை அடிப்படையாகக் கொண்டே இவ்விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்விசாரணைகளின் மூலம் மேல்மாகாணப் பகுதிகளிலுள்ள பல அதிகாரிகள் இவ்வாறான மோசடிகளில் ஈடுபட்டிருக்கின்றமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இது தொடாபான பூரண விசாரணைகளை நடத்தி அதுபற்றிய அறிக்கையை சமர்ப்பிக்குமாறு கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (தி-4)

---

## ஆணையாளர் நியமனத்தில் பிரதமர் ரணில் அசண்டையீனம்

### ஜனாதிபதி செயலகம் அறிக்கை

(கொழும்பு)

அரசாங்கத்தின் நடவடிக்கைகளால் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் செயற்பாடுகள் தடைப்பட்டுள்ளதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க குற்றம் சாட்டியுள்ளார்.

புவதறகு இதுவரை அரசியல் அமைப்புச் சபையால் எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. இந் நிலையில், ஆணைக்குழுவில் பணியாற்றுவதற்குப் பொருத்தமான எவரும் இதுவரை முன்வராததுடன எவரும் இப்பதவிக்கு விண்ணப்

---

# தேவதாயின் புகழுக்காகவே வாழ்ந்த

# தேவதாயின் புகழுக்காகவே வாழ்ந்த
# வண. வ. அ. தோமஸ் அ. ம.தி. அடிகள்

யாழ். நகரிலே பாண்டியன்தாழ்வு என்ற கிராமத்தில் வஸ்தியாம்பிள்ளை-லூயிஸ் அம்மாள் தம்பதிகளுக்கு இரண்டாவது மகனாக 1986ஆம் ஆண்டு பங்குனிமாதம 7ஆம் திகதி பிறந்தார் தோமஸ் அடிகள். இவர் தனது ஆரம்பக் கல்வியை யாழ்.புனித சால்ஸ் மகாவித்தியாலயத்தில் ஆரம்பித்தார். உயர் கல்வியை சென்பற்றிக்ஸ் கல்லூரியில் பெற்றுக் கொண்டார். சிறிது காலம் சென்.பற்றிக்ஸ் கல்லூரியில் ஆசிரியராகப் பணிபுரிநதார். இறை அருளால் 1912ல் குருத்துவ திருநிலைக்கு உயர்த்தப்பட்டார்.

1928ஆம் ஆண்டு மாசிமாதம் 2ஆம் திகதியில இருந்து தோலகட்டி வயாவிளான் கிராமத்தில் செபமாலைத் தாசர் சபையை ஆரம்பித்தார். இச்சபை யாழ்.மறை மாவட்டம் தொட்டு இலங்கை பூராகவும் பரவியது. இதேபோன்று 1948ஆம் ஆண்டு ஆவணிமாதம் 22ஆம் திகதி செபமாலை கனனியர்க்கும் ஒரு துறவுச சபையை ஆரம்பித்தார். இவரின் இறைபணிகள் வாழையடி வாழையாக வளர்ந்து இலங்கை மட்டுமல்லாமல் இந்தியாவிலும் பரவி வளரத் தொடங்கியது.

இவர்பிறந்த நூற்றாண்டு 1986ல் நிறைவு பெற்றது. செபத்திலும் தவத்திலும் தன்னையே வாட்டி வதைத்து மக்களுக்கு இறை வழியைக் காடடினார். கரைதெரியாது உருண்டோடும் பாவவாழ்ககைப்படகை செப,தப துடுப்புகள் துணைகொண்டு நல்ல படகோட்டியாக மக்களுக்கு வழி காடடினார். இன்று மக்கள் மனதில் நீங்கா இடம்பிடித்துள்ளார்.

அன்று அவர் தோலகட்டி வயாவி



ளான் கோயிலில் இரவுபகல் நற்கருணை ஆராதனை ஆரம்பித்து வைத்தபொழுது மக்கள் ஒருபகுதி வருவதும் மறுபகுதி மக்கள் போவதுமாக இருக்கும் காட்சி கண் கொளளாக் காடசியாக அமைநதது. மௌன சபைத் துறவிகளும் இருவர் இருவராக தொடர்ந்து வந்து முழங்காலில் இருந்து கைநீட்டியபடி செபமாலை சொல்லி செபிப்பார்கள்.

இவர் கோவிலில் பாவ மன்னிப்பு கேட்கவரும் மக்களை இமைகொட்டாது காத்து இருப்பார்பல திக்கிலும் இருந்து மக்கள் வந்து இவரிடம் தமது பாவக் கறையைச் சொல்லி பாவ மன்னிப்பு பெற்று புதுவாழ்வு வாழ்வார்கள். தேவதாயின் புகழுக்காக வாழ்ந்தார். தனது இலட்சிய இலக்கை

**திருமதி எ. பேரின்பராணி**
ஆசிரியை

அடைய பல சோதனைகளை எதிர் கொண்டார். பலரின் சொல் அம்புகளை யேசுவுக்காக மௌனமாக அனுபவித்தார்.இவர் மக்களிடம் அறி வையும் அன்பையும். ஆன்மீகத் தையும் வளர்த்தார். மக்களிடம நிலவிய சாதி மதமொழி வேற்றுமையை அன்பினால் அகற்றினார். மக்களுக்கு இறை விசுவாச வாழ்க்கை வாழக்கற்றுக் கொடுத்தார். பெரியோர் சிறியோர் நாவில்“ஆவே மரியா” என்னும் மந்திரத்தைச் சொல்லிக் கொடுத்தார்.1964ஆம் ஆண்டு தை மாதம்26ஆம் திகதி எம்மை விட்டுப் பிரிந்தாலும் அவர் விட்டு ச்சென்ற இறைபணி என்றும் எம்முடன் வாழ்ந்து கொண்டே இருக்கிறது. இவரின் புனிதத்தை நாம் இறைவனிடம் வேண்டுவோமாக.

□

அரசாங்கத்தின் நடவடிக்கைகளால் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் செயற்பாடுகள் தடைப்பட்டுள்ளதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க குற்றம் சாட்டியுள்ளார்.

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் செயற்பாடுகள் முடங்கிக்கிடப்பதற்கான காரணங்களை சுட்டிக்காட்டி ஜனாதிபதி செயலகம்அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

ஜனாதபதியின் செயற்பாடுகளாலேயே இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு செயற்படாமல் முடங்கிக் கடப்பதாக சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன. ஆனால் இச்செய்திகள் உண்மைக்குப் புறம்பானவை.

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைச் குழுவின் ஆணையாளர் ரி.என. அபயவீர கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் மரணமடைந்ததை அடுத்து, ஆணைக்குழுவின் சட்ட விதிகளின் படி 3 அங்கத்தவர்களைக் கொண்டதான இவ்வாணைக் குழு தனது செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாமல் இருந்து வருகிறது.

இதனைத்தொடர்ந்து இவ் ஆணைக குழுவை மீளவும் செயற்பட வைப்பதற்காக பொருத்தமான ஒருவரின பெயரை சிபாசு செய்யுமாறு அரசியல் அமைப்புச் சபைக்கும் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவுககும்ஜனாதிபதியால் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

ஆயினும் இவ் ஆணைக் குழுவில் நிலவும் வெற்றிடத்தை நிரப்புச் சபையால் எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. இந் நிலையில், ஆணைக்குழுவில் பணியாற்றுவதற்குப் பொருத்தமான எவரும் இதுவரை முன்வராததுடன எவரும் இப்பதவிக்கு விண்ணப்பிக்கவுமில்லையென அரசியல் அமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

ஆனால்,இவ்வாறானதோர் இக்கட்டான நிலைமைக்கு அரசியல் அமைப்புச் சபையின் ஆட்சேப்பு நடைமுறைகளே பிரதான காரணமாகும் இதேவேளை, உயர்பதவியை வகிக்கும் உறுப்பினர்கள் அரசியல் அமைப்புச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட நுட்பமான விசாரணை முறைகளை விரும்பவில்லை. இனாலேயே இதுவரை காலமும் இலஞ்ச ஊழல்விசாரணை ஆணைககுழு ஆணையாளர் பதவிக்கு எவரும் நியமிக்கப்படவில்லை.

அத்துடன், இந் நிலைமைகளுக்குத் தீர்வுகாணும் முகமாக உடனடியாக 3அங்கத்தவர்கள் நியமிக்கப்படாவிட்டாலும்,ஆணைக்குழு செயற்படும் வகையில் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டுவரப்பட வேண்டுமென கடந்த வருடம் ஏப்ரல் மாதம் ஆணைக்குழுவின் தலைவர் விடுத்த யோசனை ஜனாதிபதியால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதையடுத்து இவ் யோசனையை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஜனாதிபதி தெரியப்படுத்தியதற்கு இணக்கம் தெரிவித்த பிரதமர் இது விடயம் தொடர்பாக அரசியல் அமைப்புச் சபையுடன் இணைந்து மேல் நடவடிக்கைகளை எடுக்க தவறிவிட்டார் எனவும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (தி-18,60)

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்



# தேசவழமை

வரலாற்றுத்துறைப் பேராசிரியர்
**சி.பத்மநாதன்**
பேராதனைப் பல்கலைக்கழகம்.

26

முதலாம் பகுதி

### தேசவழமைச் சட்டம்

## யாழ்ப்பாண இராச்சியம்

· ஒல்லாந்தர் காலத்து தமிழாவணங்களிலே உடையார் பற்றி மேல்வரும் குறிப்புகள் உள்ளன.

"உடையார்களாய் இருக்கப்பட்ட பெயர்கள் இந்த இராச்சியத்தின் அந்தக் குடியானவர்களிடமாக தாங்கள் தலைக் கடமை முதலாக நிலங்கள், தோட்டங்கள், மரங்களுக்கும் வாங்கப்பட்ட கடமைப் பணங்களுக்கு திட உறுதியான கச்சாத்து அவர்களுக்குக் கொடுக்கவேண்டியது. அந்தப் படியாகத்தானே இறைசுவதோர்மாரும் தங்கள் கீழாகிய உடையார்கள் கொண்டுவந்து கொடுக்கப்பட்ட நிலக் கடமை தலைக் கடமை முதலான பணங்களுக்கு தாங்கள் ஒப்புக்கொண்டபடிக்குக் கச்சாத்துக் கொடுக்கக் கடனாளியாயிருக்கிறார்கள்..."

"உடையார்களாயிருக்கப்பட்ட பேர்கள் ஊர்களிலும் குறிச்சிகளிலும் வந்து சம் பவிக்கப்பட்ட சகலமான களவுக்கும் பொல்லாப்புகள், இடையூறுகள் முதலான வகை தப்பிதங்களுக்கும் எதிரிடையாக நல்ல கட்டளையான காவல் கட்டுடனே அறுக்கை பண்ணிக்கொள்ள வேண்டியது. இதுகளிலே குறைபாடு நடப்பித்தால் தொழிலும் மாற்றி விடுகிறதறியவும் இந்தப் பற்றுக்களிலே இறைசுவதோர்மாருக்கும் உடையார்களுக்கும் கடூரமாக கற்பிக்கும் வகையாவது இந்த இராச்சியத்திற் குடியானவர்களுடைய தலைக் கடமை நிலக்கடமை முதலானதுகள் வருஷத்துக்கு நாலு கந்தாயப்படிக்குக் கார்த்திகை மாதத்திலேயும் மாசி மாதத்திலேயும் வைகாசி மாதத்திலேயும் ஆவணி மாத முதற் திகதியிலேயும் ஒடுக்குவிக்கவேண்டியது. இந்த ஈற்றுக் கந்தாயம் ஆவணியரை மாதத்துக்குள்ளாக கொம்பஞ்ஞீயவின் பொக்கிஷத்திலே ஒடுக்கவும் வேண்டியது. இதிற் குறைபாடு நடப்பித்தால் இறைசுவதோர்மார் என்கிலும் உடையார்கள் என்கிலும் தொழில் மாற்றி விடுகிறது அறியவும்"

"இந்த இராச்சியத்திலே சகலமான உடையார்கள், கையாட்கள் மற்றும் குடியான பேர்களுக்கும் இந்தக் கட்டளை கொண்டு திட்டாந்தமாகக் கற்பிக்கிறோம். சுண்ணாம்பறை மறிப்புக் கூடங்களை முறித்தொளித்துப் போன யாதொரு கள்ளர்களை என்கிலும் மற்றும் நாடு புறங்களில் ஊர்களுக்குள்ளாக இருக்கப்பட்ட பொல்லாத இயற்கைக் காரராகிய பேர்களே என்கிலும் இருத்திக் கொள்ளவும் இருக்க இல்லிடம் கொடுக்கவும் யாதொரு உண்பனவு, குடிப்பனவு கொடுத்து நடப்பிக்கவும் நடத்தவும் ஒண்ணாது.ஆனால் அப்படிக்கொத்த பேர்களை ஆராய்ந்து பிடித்து வந்து ஒப்புக்கொடுக்க வேண்டியது"

இங்கு மேற்கோளாக கையாளப்பட்ட ஆவணக் குறிப்புகளின் அடிப்படையில் உடையார்களின் பொறுப்புகள் கடமைகள் என்பன பற்றி மேல்வரும் அம்சங்கள் தெளிவாகின்றன. உடையார் என்னும் பதவியைப் பெற்றவர்கள் இறைசுவதோரின் கீழ் பணி புரிந்தவர்கள். அவர்களின் கடமைகளில் சில இறைவரிகள் சம்பந்தமானவை. தலைவரி, நிலக்கடமை, மேல்வாரம், மரவிறை முதலான வரிகளை குடியான வர்களிடமிருந்து அவர்கள் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். வரிகளைச் செலுத்து வோருக்கு பற்றுச்சீட்டாக பட்டோலை வழங்க வேண்டும். குடியானவர்களிடமிருந்து கிடைத்த இறை கடமைகளை உடையார் இறைசுவதோரிடம் ஒப்படைத்து பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

உடையாரின் மற்றைய பிரதான பொறுப்பு ஊர்காவல் பற்றியதாகும். களவு, கொள்ளை முதலான சமூக விரோதச் செயல்களைப் புரிவோரை அறுக்கை பண்ணுவதும்

**வலம்புரியின் அனுசரணையுடன்**
வட்டுக்கோட்டை-சங்கரத்தை
பாலன் மில் உரிமையாளர்
இராசையா சோமசுந்தரம்
அவர்களின் ஞாபகார்த்தமாக நடாத்தப்படும்
**கவிதைப் போட்டி -2004**
1ம் பரிசு தங்கப் பதக்கம்
2ம் பரிசு வெள்ளிப் பதக்கம்
3ம் பரிசு வெண்கலப் பதக்கம்
இவை தவிர மேலும் பல ஆறுதல் பரிசுகள்
விடயம்
**"தமிழா உனக்கேன் இக்கதி"**
விதிகள்
* போட்டியாளர் ஒரு கவிதை மட்டுமே போட்டிக்கு அனுப்ப முடியும்.
* விடயத்தில் தரப்பட்ட தலைப்பை பிரதிபலிப்பதாக கவிதைகள் அமைய வேண்டும். (கவிதைக்குள் விடயத் தலைப்புவரி இடம்பெற வேண்டும் என்பது அவசியமில்லை)
* போட்டிக்கவிதை மரபுக் கவிதையாகவோ அன்றி புதுக் கவிதையாகவோ அமையலாம்.
* மரபுக் கவிதையாயின் 12 வரிகளை மட்டும் கொண்டதாகவும் புதுக்கவிதையாயின் 12 தொடக்கம் 16 வரிகளுக்கு உட்பட்டதாகவும் இருத்தல் வேண்டும்.
* கவிதைகள் யாவும் சொந்த ஆக்கமாக இருப்பதுடன், தெளிவாக எழுதப்பட வேண்டும்.
* கவிதை எழுதப்பட்ட தாளில் போட்டியாளர் தனது பெயரை எழுதுவது தவிர்க்கப்பட வேண்டும்.
* வயதெல்லை வரையறுக்கப்படவில்லை
* கவிதைப் போட்டியில் பங்குபற்றுபவர்கள் வலம்புரியில் வெளிவரும் கூப்பனையும் உறுதியுரையையும் நிரப்பி கவிதையுடன் இணைத்து அனுப்புதல் அவசியமாகும்.

**உங்கள் கவிதைகளை
கவிதைப்போட்டி-2004
வலம்புரி
இல-15,வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு 31.01.2004ற்கும்
பிந்தாமல் கிடைக்கக்கூடியதாக அனுப்பி
வைக்கவும்.**
★ பரிசுக்கான கவிதைகள் நடுவர் குழுவால் தெரிவு செய்யப்படும்.
இங்கே வெட்டி கவிதையுடன் இணைத்து அனுப்புக.

இராசையா சோமசுந்தரம் ஞாபகார்த்த
கவிதைப்போட்டி- 2004 விண்ணப்பம்

"உடையார்களாயிருக்கப்பட்ட போ்கள் ஊர்களிலும் ...
பவிக்கப்பட்ட சகலமான களவுக்கும் பொல்லாப்புகள், இடையூறுகள் முதலான வகை தப்பிதங்களுக்கும் எதிரிடையாக நல்ல கட்டளையான காவல் கட்டுடனே அறுக்கை பண்ணிக்கொள்ள வேண்டியது. இதுகளிலே குறைபாடு நடப்பித்தால் தொழிலும் மாற்றி விடுகிறதறியவும் இந்தப் பற்றுக்களிலே இறைசுவதோர்மாருக்கும் உடையார்களுக்கும் கடூரமாக கற்பிக்கும் வகையாவது இந்த இராச்சியத்திற் குடியானவர்களுடைய தலைக் கடமை நிலக்கடமை முதலானதுகள் வருஷத்துக்கு நாலு கந்தாயப்படிக்குக் கார்த்திகை மாதத்திலேயும் மாசி மாதத்திலேயும் வைகாசி மாதத்திலேயும் ஆவணி மாத முதற் திகதியிலேயும் ஒடுக்குவிக்கவேண்டியது. இந்த ஈற்றுக் கந்தாயம் ஆவணியரை மாதத்துக்குள்ளாக கொம்பஞ்ஞீயவின் பொக்கிஷத்திலே ஒடுக்கவும் வேண்டியது. இதிற் குறைபாடு நடப்பித்தால் இறைசுவதோர்மார் என்கிலும் உடையார்கள் என்கிலும் தொழில் மாற்றி விடுகிறது அறியவும்"

"இந்த இராச்சியத்திலே சகலமான உடையார்கள், கையாட்கள் மற்றும் குடியான போ்களுக்கும் இந்தக் கட்டளை கொண்டு திட்டாந்தமாகக் கற்பிக்கிறோம். சுண்ணாம்பறை மறிப்புக் கூடங்களை முறித்தொளித்துப் போன யாதொரு கள்ளர்களை என்கிலும் மற்றும் நாடு புறங்களில் ஊர்களுக்குள்ளாக இருக்கப்பட்ட பொல்லாத இயற்கைக் காரராகிய போ்களே என்கிலும் இருத்திக் கொள்ளவும் இருக்க இல்லிடம் கொடுக்கவும் யாதொரு உண்பனவு, குடிப்பனவு கொடுத்து நடப்பிக்கவும் நடத்தவும் ஒண்ணாது.ஆனால் அப்படிக்கொத்த போ்களை ஆராய்ந்து பிடித்து வந்து ஒப்புக்கொடுக்க வேண்டியது"

இங்கு மேற்கோளாக கையாளப்பட்ட ஆவணக் குறிப்புகளின் அடிப்படையில் உடையார்களின் பொறுப்புகள் கடமைகள் என்பன பற்றி மேல்வரும் அம்சங்கள் தெளிவாகின்றன. உடையார் என்னும் பதவியைப் பெற்றவர்கள் இறைசுவதோரின் கீழ் பணி புரிந்தவர்கள். அவர்களின் கடமைகளில் சில இறைவரிகள் சம்பந்தமானவை. தலைவரி, நிலக்கடமை, மேல்வாரம், மரவிறை முதலான வரிகளை குடியான வர்களிடமிருந்து அவர்கள் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். வரிகளைச் செலுத்து வோருக்கு பற்றுச்சீட்டாக பட்டோலை வழங்க வேண்டும். குடியானவர்களிடமிருந்து கிடைத்த இறை கடமைகளை உடையார் இறைசுவதோரிடம் ஒப்படைத்து பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

உடையாரின் மற்றைய பிரதான பொறுப்பு ஊர்காவல் பற்றியதாகும். களவு, கொள்ளை முதலான சமூக விரோதச் செயல்களைப் புரிவோரை அறுக்கை பண்ணுவதும் அமைதியை நிலைநாட்டுவதும் அவர்களின் கடமையாகும். நீதி பரிபாலனத்தில் அவர்கள் உயரதிகாரிகளுக்கு ஆதரவும் ஒத்துழைப்பும் வழங்கவேண்டும்.

## தலையாரி

ஊர்களின் தலைமைக்காரரை தலையாரி என்று குறிப்பிடுவது முற்கால வழமை. பட்டங்கட்டி, அடப்பனார் என்பன மீனவர், பரவர், கரையார் முதலியோர் வாழ்ந்த ஊர்களின் தலைமைக்காரருக்குரிய பட்டங்களாகும். ஊர்மட்டத்திலுள்ள தலைமைக்காரர் மூலமாகவே அரசாங்கவதிகாரிகள் குடியானவர்களோடு தொடர்பு கொள்வது வழமை. சமூக வழமைகள், ஊர்காவல், இறை கடமைகள், ஊழியம் முதலான விடயங்கள் தொடர்பாக அவர்களுக்குப் பொறுப்புகள் இருந்தன.

தலையாரிகளுக்கு வேதனமாகப் பணங் கொடுக்கும் வழமையில்லை. அவர்களுக்குச் சீவிதமாக வயற் காணிகள் வழங்கப்பட்டன. பதவி பரம்பரை உரிமையாகியவிடத்து நிலமானியங்களும் அவர்களின் குடும்பத்தினரின் பரம்பரை உடைமைகளாகி விடுவதுண்டு. அடப்பனாரும் பட்டங்கட்டிமாருங் கடற்றொழில் புரிவோரிடமிருந்து ஒவ்வொரு தோணிக்கும் ஒவ்வொரு பணம் அல்லது இவ்விரண்டு பணம் என்றவாறு சேர்த்துக் கொள்வார்கள்.

தலையாரி முதலான பதவிகள் பரம்பரை உரிமையாக இருந்தன. தலையாரி ஒருவன் அரசனுக்கு 60 சக்கரம் காசினைக் கொடுப்பதன் மூலம் தனது பதவியை தன் மக்களில் ஒருவனுக்கு பெற்றுக்கொடுக்கலாம். பிள்ளைகள் இல்லாதவிடத்து அவ்வாறு பணத்தை அரசினருக்குக் கொடுத்து தனது உறவினருள் ஒருவனைத் தனது பதவிக்குரிய வாரிசாகத் தெரிவுசெய்யலாம். அவ்விடத்துத் தலையாரியும் அவனிடமிருந்து பதவியைப் பொறுப்பேற்பவனும் தனித்தனியாக 60 சக்கரம் காசினை அரசனுக்குக் கொடுக்க வேண்டும்.

## வன்னியனார்

வன்னிபம், வன்னிமை, வன்னியனார் எனப் பலவாறு வழங்கிய பிரதானிகள் வன்னி பற்றுக்கள் எனப்படும் குறுநிலப் பிரிவுகளின் நாயகராயிருந்தனர். பனைங்காமம், கரிக்கட்டு மூலை, கருநாவல் பத்து , மேல்பத்து, முள்ளியவளை, தென்னமரவாடி, செட்டி குளம் என்னும் வன்னிப் பிரிவுகள் யாழ்ப்பாண இராச்சியத்தினுள் அடங்கியனவாகும்.

(தொடரும்)


❁ மரபுக் கவிதையாயின் 12 வரிகளை மட்டும் கொண்ட தாகவும் புதுக்கவிதையாயின் 12 தொடக்கம் 16 வரிக ளுக்கு உட்பட்டதாகவும் இருத்தல் வேண்டும்.

❁ கவிதைகள் யாவும் சொந்த ஆக்கமாக இருப்பதுடன், தெளிவாக எழுதப்பட வேண்டும்.

❁ கவிதை எழுதப்பட்ட தாளில் போட்டியாளர் தனது பெயரை எழுதுவது தவிர்க்கப்பட வேண்டும்.

❁ வயதெல்லை வரையறுக்கப்படவில்லை

❁ கவிதைப் போட்டியில் பங்குபற்றுபவர்கள் வலம்புரியில் வெளிவரும் கூப்பனையும் உறுதியுரையையும் நிரப்பி கவிதையுடன் இணைத்து அனுப்புதல் அவசியமாகும்.

உங்கள் கவிதைகளை
கவிதைப்போட்டி-2004
வலம்புரி

இல-15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு 31.01.2004ற்கும் பிந்தாமல் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.

★ பரிசுக்கான கவிதைகள் நடுவர் குழு வால் தெரிவு செய்யப்படும்.

இங்கே வெட்டி கவிதையுடன் இணைத்து அனுப்புக.

இராசையா சோமசுந்தரம் ஞாபகார்த்த கவிதைப்போட்டி- 2004 விண்ணப்பம்

அலுவலகப்பாவனைக்கு

முழுப்பெயர்........................
........................
தபால் முகவரி........................
........................
பிறந்த திகதி........................
தே.அ.அ. இல ........................
மாணவராயின்/பாடசாலையின் பெய ரைக் குறிப்பிடவும்.

........ ........................
திகதி போட்டியாளர் கையொப்பம்

உறுதியுரை

இத்துடன் அனுப்பப்படுகின்ற கவிதை எனது சொந்த ஆக்கம் என்றும் வேறு எந்தக்கவிதைகளின் தழுவலும் அல்ல என்றும். இப்போட்டிக்கு ஒரு கவிதையை மட்டுமே அனுப்பிவைக்கிறேன் என்றும் இத்தால் சத்தியம் செய்கி றேன்.

........ ........................
திகதி போட்டியாளர்கையொப்பம்

# குடாநாட்டு மாணவர்களின் கல்வி வீழ்ச்சிக்குக் காரணம் மாணவர்களே

மாணவர்களின் கல்வி வீழ்ச்சிக்குக் காரணம்

ஆசிரியர்களா?
மாணவர்களா?
பெற்றோர்களா?

என்ற தலைப்பில் ''ஆசிரியர்களே'' காரணமென ஆதிரையான் முன்வைத்த கருத்திற்கான மறுப்பு விவாதம்

**விவாத அரங்கு**

வீதியில் நடந்து செல்லும் ஒருவரின் காலில் கல்லடிபடுகின்றது. அதற்குக் காரணம் அவரது காலா? அல்லது தெருவில் கிடந்த கல்லா? ஆராய்ந்து பார்த்தால் அவரது அவதானக் குறைவே காரணம் என்பது புலனாகும்.

மாணவர்களின் கல்வி வீழ்ச்சிக்கு பெற்றோரும் ஆசிரியர்களும் தான் காரணம் என அவர்கள் மீது பழி சுமத்துவதால் எத்தகைய பயனும் ஏற்படப் போவதில்லை.

வாழைப் பழத்தை உரித்துக் கொடுத்தாலும் கூட அதை உண்பதற்குக் கஷ்டப்படுகின்ற ஒரு கூட்டம் இருக்கத்தான் செய்கிறது.

ஒரு வகுப்பில் பத்துப் பேர் கல்வி கற்கின்றனர். ஆறுபேர் சித்தியடைகின்றனர். மிகுதி நாலு பேர் கோட்டை விடுகின்றனர் என்றால் பழியை ஆசிரியர்கள் மீதும் பெற்றோர் மீதும் சுமத்துவது எந்த விதத்தில் நியாயமாகும் பத்துப் பேர்களுக்கும் ஆசிரியர் விருப்பு வெறுப்பின்றி ஒரே மாதிரித்தான் கற்பித்தார். கவனமாகப் படித்தவர்கள் சித்தி பெற்றனர் புலனை வேறு வழியில் செலுத்தியவர்கள் கோட்டை விட்டார்கள் இது தான் உண்மை நிலை.

பெரும்பாலான பெற்றோர் குடும்பச் சுமை, வீட்டுக் கஷ்டம் எல்லா வற்றையும் சகித்துக் கொண்டு தியாக சிந்தையுடன பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்குத் தம்மை அர்ப்பணித்துக் கொள்கின்றனர். எந்தப் பெற்றோரும் தம்பிள்ளைகள் கெட்டுப் போக வேண்டுமென நினைப்பதில்லை.

இடியப்பம் செய்து விற்று, மாவு இடித்து பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்காக ஓடாய் தேய்ந்து மாடாய் உழைக்கும் தாய்மார்கள் பலரை நாம் பார்த்திருக்கிறோம அவர்கள் படும் கஷ்டங்களைச் சிறிதும் பொருட்படுத்தாமல் பாடசாலையின் பெயரைச் சொல்லி அவர்களிடம் பணம் பெற்று வீண் செலவு செய்து உல்லாசமாகப் பொழுதைப் போக்கும் பிள்ளைகளையும் கண்டிருக்கிறோம்.

ஆசிரியர்களும் ஒரு குடும்பத்தின் அங்கத்தவர்களே தம்மிடம் படிக்கும் எல்லா மாணவர்களையும் தமது பிள்ளைகள் என எண்ணி நடப்பவர்கள். ''பிறர் பிள்ளை தலை தடவ தன்பிள்ளை தானாய் வளரும்'' என்ற எண்ணத்துடன் பணியாற்றுபவர்கள். கரிசனையுடன் ஆசிரியர் கற்பிப்பதைக் கவனியாமல் ஊர்க் கதையும் திரைப் படக் கதையும் பேசிக் கொண்டிருக்கும் மாணவர்களால் கல்வியில் எப்படி முன்னேற முடியும்?

பாடசாலையில் திரைப்பட விமர்சனங்களுக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தைப் படிப்புக்குக் கொடுத்தால் கல்வி வீழ்ச்சியடையுமா?

முனனொரு காலத்தில் குருவைத தெய்வமாக மதித்து அவர் காலில் வீழ்ந்து வணங்கி கல்வி கற்ற வரலாறு உண்டு.

துரோணரைக் குருவாக எண்ணி, அவர் சிலையை வணங்கி வில் வித்தை கற்ற ஏகலைவன் கதையோடு இன்றைய மாணவர்கள் நிலையை ஒப்பிட்டுப் பார்த்தால்...? இன்று ஆசிரியர்கள் மாணவர்களுக்கு பயந்து கும்பிட்டுப் படிப்பிக்க வேண்டிய நிலை ஒவ்வொரு ஆசிரியருக்கும் ஒவ்வொரு பட்டப் பெயர்? வருமா. ஆசிரியர் சற்றுக் கடுமையாக நடந்து கொண்டால அவரது சயிக்கிள் சில்லின் காற்றைத் திறந்து விடுவது, ஒழித்து நின்று கல் எறிவது, கூடி நின்று கூச்சலிடுவது போன்ற செயல்களில் ஈடுபடும் மாணவர்களை நாம் கண்டிருக்கிறோம்.

இன்று யாழ்ப்பாண சமூகத்தில் பல்கலைக்கழகத் துணைவேந்தர் உட்பட பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் வரை மாணவர்களால் படுத்தப்படும் பாட்டை நாளாந்தம் பத்திரிகைகளில் பார்த்துக் கொண்டு தான் இருக்கிறோம். இத்தகு சம்பவங்கள் வருங்காலத்தில் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தலாம்.

கோஷ்டி தோமல், காதல் சச்சரவு, குடிவெறி, கலாசார சீரழிவுகள் எல்லாம் இன்று மாணவர் மத்தியில் இடம்பெறும் சர்வசாதாரண சம்பவங்கள். தொலைக்காட்சித் தொடர்களில் தொலைந்து போன மாணவர்கள், பெரியார்கள் ஏராளம். ஏ-9 பாதையால் ஏதேதோவெல்லாம் வருகிறது; போகிறது. இவ்வாறான சமூகப் பிறழ்வுகள் தான் மாணவர்களின் கல்வி வீழ்ச்சிக்குக் காரணமாக அமைகின்றன.

சில ஆசிரியர்கள் மீது பிழைகள் இருக்கலாம். பெற்றோர் சிலர் மதும் பிழைகள் இருக்கலாம். ஒட்டு மொத்தமாகப் பார்த்தால் இவை ஆயிரத்தில் ஒன்றாகத் தான் இருக்கும்.

மாணவர்கள் பெற்றோர் நிலையையும் தம் நிலையையும் உணர்ந்தால் பிரச்சினை என்பதற்கே இட மேற்படாது. ஒரு காலத்தில் நாட்டின் கண்கள் எனப் போற்றப்பட்ட மாணவர்கள் நாட்டின் புண்கள் என்று தூற்றப்படும் நிலை ஏற்படக் கூடாது.

பெற்றோரும் ஆசிரியர்களும் கூறும் அறிவுரைகள் மாணவர்கள் காதில் புல்லர்க்கு நல்லோர் சொன்ன பொருளெனப் போயின், மாணவர் சமுதாயம் எப்படி முன்னேற முடியும் ?

மாணவர்களது உயர்ச்சியும் விழ்ச்சியும் அவர்களிலேதான் தங்கியிருக்கின்றது. ஆழமாக ஆராய்ந்து பார்த்தால் பெற்றோரின் சொல்லை மதிக்காத மாணவர் கல்வியும், ஆசிரியரை மதிக்காத மாணவர் பண்பும் மாணவர்களின் கல்வித்தர வீழ்ச்சிக்குக் காரணமாகும் என்பது மறுக்கவோ மறைக்கவோ முடியாத உண்மையாகும். □

ஜோ.ஜெஸ்ரி[illegible]

---

# கங்கொடவில தேரரின் பெயரில் மருந்து ஒன்றுக்கு விளம்பரம்

(கொழும்பு)

அண்மையில இணையத்தளத்தில் ஒரு மருந்துக்கு கங்கொடவில சோமதேரர் என பெயரிடப்பட்ட விடயம் பற்றி புத்தசாசன அமைச்சர் லொக்குபண்டாரவின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. நேரர் இறக்க முன்னரே இம் மருந்திற்கு பெயர் சூட்டப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இம் மருந்து buy somal.com என்னும் இணையத்தள முகவரியின் கீழ் [illegible]

அத்துடன் இது குறித்து ஜனாதிபதிக்கும் அறிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. பௌத்தத்திற்கு எதிரான அமைப்புகளே இதனைச் செய்திருப்பதாக தேரர் ஒருவர் தெரிவித்தார்.

இவ்விடயம் பற்றி சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் கவனத்திலெடுக்க வேண்டும். சமூகங்களுக்கிடையில் வன்முறையைத் தூண்டவே இவ்வாறு செய்யப்பட்டுள்ளது. இச்சக்திகளைக் கண்டறிய வேண்டும். [illegible]

இதேவேளை, இவ் இணையத்தளம் 2003 நவம்பர் 18 அன்று உருவாக்கப்பட்டுள்ளதாகவும் ஆனால் தேரரின் மறைவு இதன் பின்னரே இடம்பெற்றதாகவும் சிங்கள இணையத்தளம் ஒன்று தெரிவித்துள்ளது. அத்துடன் இத்தளத்தில் பிழையான தகவல் வழங்கப்பட்டுள்ளது. என்றும் போலியான இம்மருந்து www buy somal.Com என்னும் முகவரியின் கீழ் தவறாக விளம்பரப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக் [illegible]

---

சுப்பிரமணியம் பூங்கா

# புனரமைப்புக்கு மேலதிக நிதி வழங்க யுனிசெவ் இணக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ். சுப்பிரமணியம் பூங்காவை மீளப் புனரமைக்கும் பணிகௌன யுனிசெவ் நிறுவனம் 18 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாவை யாழ்.மாநகரசபையிடம் வழங்கியுள்ளது.

இதேவேளை, மேற்படி நிதியானது புனரமைப்புப் பணிகளுக்கு போதாமல் இருப்பது சுட்டிக்காட்டப்பட்டிருப்பதையடுத்து மேலதிக நிதியை வழங்கவும் யுனிசெவ் முன் வந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

யாழ். வணிகர்களிடம் இருந்து இந் நிதியைத் திரட்டவும் தி[illegible] மிடப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்தகால போர் அனர்த்தங்களினால் கைவிடப்பட்டிருந்த சுப்பிரமணியம் பூங்காவைப் புனரமைக்கும் பணிகள் தற்போது ஆரம்பமாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-3)

# முஸ்லிம்கள் பிரிந்து செல்வதை

இணையத்தள முகவரியின் கீழ் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது.

இது பற்றி புத்தசாசன அமைச்சிற்கு அறிவித்ததைத் தொடர்ந்து இதுபற்றித் தான் கவனம் செலுத்துவதாக அமைச்சர் தெரிவித்தார்

இவ்வாறு செய்யப்பட்டுள்ளது. இச்சக்திகளைக் கண்டறிய வேண்டும். இவையே மதமாற்றச் சட்டம் பாராளுமன்றில் நிறைவேற முன்னர் பாராளுமன்றத்தை கலைக்க வேண்டுமென வலியுறுத்தி வருகின்றன என்றார்.

somal.Com என்னும் முகவரியின் கீழ் தவறாக விளம்பரப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கிப்படுகின்றது.

(த-6)

# மனோ-மலிக் குழு மீண்டும் செவ்வாய்க்கிழமை கூடும்

(கொழும்பு)

ஜனாதிபதிக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையே இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்காக நியமிக்கப்பட்ட மனோ- மலிக் குழுவினா எதிர்வரும் 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மீண்டும் கூடி ஆராயவுள்ளனர்.

பாதுகாப்பு அமைச்சு மற்றும் சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதில் உள்ள நடைமுறைச்சிக்கல்கள் மற்றும் அரசியல் பிரச்சினைகள் குறித்தே இக்கூட்டத்தில் விசேடமாக ஆராயப்படவுள்ளது.

அத்துடன் இரு பிரதான அரசியல் கட்சிகளுக்கிடையே தற்போது நிலவிவரும் முரண்பாடுகள் குறித்தும் ஆராயப்படவுள்ளதாக பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

இது வரை நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் அடிப்படையில் இணக்கப்பாட்டுக்கு வந்த விடயங்கள் தொடர்பான அறிக்கை ஒன்று அக் கூட்டத்தில் வெளியிடப்படவுள்ளது.

இதேவேளை, கடந்த டிசம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்ட மனோ-மலிக் குழுவினரின் பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதென கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இச் சந்திப்பில் அரசாங்க நிர்வாக மற்றும் சமாதான நடவடிக்கைகளின் தற்போதைய நடவடிக்கைகள் இக் குழுவினால் இதுவரை மேற்கொள்ளப்பட்ட இணக்கப்பாடுகள் குறித்தும் இங்கு விசேடமாக கலநதுரையாடப்பட்டது.

ஜனாதிபதியின் சார்பாக அவரது சிரேஷ்ட ஆலோசகர், மற்றும் செயலாளர் ஆகியோரும் பிரதமர் சார்பாக அவரது செயலாளர் மற்றும் ஐக்கிய தேசியக்கட்சியின் தவிசாளர் ஆகியோர் கலந்து கொண்டனர். (தி-61)

## பயண அட்டை கண்டெடுப்பு

புதுக்குடியிருப்பு வள்ளிபுனம் நாவலடியாறைச் சேர்ந்த நடேசு. நாகராஜா என்பவருடைய போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவின் நிரந்தரப் ப்யண அட்டை கண்டெடுக்கப்பட்டு வலம்புரிக் காரியால யத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் நேரில் வந்து பெற்று கொள்ளவும்.

## பட்டப் பகலில் 15 பவுண் நகை திருட்டு

(இருபாலை)

பட்டப்பகலில் 15 பவுண் தங்க நகையைத் திருடிச் சென்ற சம்பவம் ஒன்று கடந்த வியாழனன்று கோப்பாய் தெற்கு பழைய பொலிஸ் நிலைய வீதியில் உள்ள எஸ். செல்வராசா என்பவரது வீட்டில் இடம்பெற்றுள்ளது.

வீட்டார் பின்பக்கத்தில் நின்ற வேளை, வீட்டினுள்ளே புகுந்த திருடன் சூட்கேசினுள் வைக்கப்பட்டிருந்த நகைகளைக் கையாடிச் சென்று விட்டு, சூட்கேசை இருபாலைப் பகுதியில் எறிந்துவிட்டுச் சென்றதாகக் கூறப்படுகிறது.

(உ-84)

# முஸ்லிம்கள் பிரிந்து செல்வதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது

## இராதாகிருஷ்ணன் எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ்க்கட்சிகள் தத்தமது கட்சிகளை வளர்த்தெடுக்கும் முயற்சிகளில் அதிக கவனம செலுத்தி வருவதைக் கைவிட்டும் தமக்கிடையிலான உட்பூசல்களை மறந்தும் ஒன்றிணைந்து ஒரு கூட்டமைப்பை உருவாக்கவேண்டும். அத்துடன், தமிழ் மக்களின் வாழ்க்கையை அபிவிருத்திப் பாதையில் மலர வைப்பதற்காக அனைத்துத் தமிழ் தரப்பினரும் பாடுபடவேண்டியது மிக முக்கியமானது அதற்காக தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைய வேண்டுமென அவர்களை வலியுறுத்துவது தமிழ் மக்களின் முக்கிய கடமையாகும் என பாராளுமன்ற உறுப்பினர் பெ.இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசியல் நிலைமைகள் தொடர்பாக கருத்துத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

தமிழரும் முஸ்லிம்களும் தனித்தரப்பாகப் பிரிந்து செல்ல வேண்டுமென்று அண்மையில தேசிய ஐக்கிய முன்னணித் தலைவி பேரியல் அஷ்ரப் கருத்து வெளியிட்டிருந்தார்.

ஒரு தாய் வயிற்றுப்பிள்ளைகளான தமிழரும் முஸ்லிம்களும் ஒருபோதும் பிரிந்து போவதை எம்மால் அனுமதிக்க முடியாது.

எமது சகோதர இனமான முஸ்லிம்கள் பிரிந்து செல்வதற்கோ அன்றி அவர்களைப் பிரிந்து ஆள்வதற்கோ அல்லது அவர்களின் மனம் நோகும்படியான செயற்பாடுகள் இடம்பெறுவதற்கோ ஒருபோதும் அனுமதிக்க முடியாது என முன்னர் தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரன் கூறிய கருத்தையே நானும் கூறுவதற்கு விரும்புகிறேன். இதைவிடுத்து முஸ்லிம் தரப்புத் தனித்துப் போவது தான் சரியென்று நான் கூறமாட்டேன்.

இதேவேளை, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஜே.வி.பியும் தற்போது கூட்டிணைந்து சமாதான முயற்சிகளைக் குழப்புவதற்கு மீண்டும் சதித்திட்டம் தீட்டி வருகின்றன. இதனை அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் ஒன்றிணைந்து எதிர்க்க வேண்டும் என்றார்.

(உ-61,18,10)

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

## இஸ்ரேல் அமைக்கும் தடுப்புச் சுவரால்

# பலஸ்தீன தனிநாடு உருவாக்கம் காலம் கடந்து செல்கிறது

(ஜெருசலேம்)

பலஸ்தீன எல்லைப்பகுதியில் தடுப்புச் சுவர் கட்டும் பணியில் இஸ்ரேல் தொடர்ந்து ஈடுபட்டு வருவதாலும், யூதக்குடியிருபுககளை விரிவுபடுத்தி வருவதாலும் பலஸதீனத் தனிநாடு உருவாகுவதற்கான காலம் கடந்து செல்வதாக பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத் கவலை தெரிவித்துள்ளார்.



"தகார்டியன" என்ற பிரிட்டிஷ் செய்தி நிறுவனத்திற்கு பேட்டியளிக்கையிலேயே அரபாத் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து பேட்டியளிக்கையில்,

தடுபபுச்சுவர், பலஸ்தீனக் கைதிகளின் விடுதலை போன்ற முக்கிய விடயங்களில் இஸ்ரேல் தம்முடன் இணைந்து செயற் படாத காரணத்தினால் தான் முஹமட் அப்பாஸ் தலைமையிலான முன்னைய பலஸ்தீன அரசு கவிழ்ந்தது. எனக்கு மாற்றாக வேறு ஒருவரைக் கொண்டுவருவது என்பது இஸ்ரேலுக்கும் அமெரிக்காவுககும் கடினமான விடயம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (தி-2)



செவ்வாய்க் கிரகத்திற் கு அமெரிக்கா அனுப்பிய ஸ்பிரிட் என்ற விண்கலம் அங்கிருந்து பல வண்ணப் புகைப்படங்களை எடுத்து அனுப்பி வருகிறது. ஸ்பிரிட் விண்கலம் எடுத்தனுப்பிய புகைப் படத்தில் செவ்வாய்க் கிரகத்தின் தரைப்பகுதியில் கிணறு தோண்டியது போன்ற ஒரு பள்ளம் இருப்பதைக் காணலாம்.

# ஈராக் யுத்தம் நியாயமானதா? விசாரணை நடத்தவேண்டும்

## புஷ் நிர்வாகத்திற்கு ஜோன் எட்வேட் நெருக்குதல்

(வாஷிங்டன்)

ஈராக் மீது அமெரிக்க கூட்டுப்படையினா மேற்கொண்ட யுத்தம் குறித்து சுதந்திர ஆணைக்குழு விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும் என அமெரிக்க ஜனநாயகக் கட்சியின் வேட்பாளரான ஜோன் எட்வேட் புஷ் நிர்வாகத்திடம் கேட்டுக் கொண்டுள்ளார்.

ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் தலைமையிலான நிர்வாகம் அமெரிக்க காங்கிரஸை தவறாக வழி நடத்தியே இந்த யுத்தத்தை மேற்கொண்டதா என்பது குறித்து இதன்மூலம் உறுதியாக அறிய முடியும் எனவும் அவர் கூறியுள்ளார்.

அமெரிக்காவின் பிரதான இராணுவக் கண்காணிப்பாளரும் ஆயுத பரிசோதகருமான டேவிற் ஹேயின் திடீர் இராஜினாமா மற்றும் அவரது கருத்துக்கள் ஆகியவற்றை விசாரணை செய்ய வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஈராக்கில் பேரழிவை ஏற்படுத்தும ஆயுதங்கள் எவையும் மறைத்து வைககப்படவில்லை. இது குறித்து விரிவாக ஆராய்ந்து உண்மை நிலையை மக்களுக்கு உணர்த்த வேண்டும் என ஜோன் எட்வேட் கேடடுள்ளார். (தி-2)

## குடியரசு தினத்தை முன்னிட்டு இந்தியாவில் பாதுகாப்பு பலம்

(புதுடில்லி)

இந்தியாவில் குடியரசு தினம் இன்று கொண்டாடப்படுகிறது. இக் குடியரசு தின நிகழ்வுகளை முன்னிட்டு நாட்டின் பல பாகங்களிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக குடியரசு தின வைபவம் இடம்பெறும் நகரங்களான புதுடில்லி, செங்கோட்டை உட்பட அதனை அண்டிய பிரதேசங்களின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

தீவிரவாதிகளின் ஊடுருவல் தாக்குதல் அச்சம் காரணமாகவே பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

புதுடில்லியில் நடைபெறவுள்ள இந்த வைபவத்தில் ஜனாதிபதி அப்துல்கலாம் ,பிரதமர் வாஜ்பாய் துணைப்பிரதமர் அத்வானி மற்றும் முக்கிய தலைவர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதேவேளை, ஸ்ரீநகரில் குடியரசு தின நிகழ்வுகளை குழப்புவதற்காக பாகிஸ்தான் ஆதரவுப் பயங்கரவாதிகள் பதுக்கி வைத்திருந்த வெடி மருந்துப் பொருட்கள் மற்றும் ஆயுதங்களை எல்லைப் பாதுகாப்புப் படையினர் கண்டுபிடித்துள்ளனர்.

ஸ்ரீநகர் புறநகர்ப் பகுதியில் பயங்கரவாதிகள் வெடிமருந்துகளுடன் பதுங்கியிருப்பதாக கிடைத்த தகவலையடுத்து எல்லைப் பாதுகாப்புப்படையினர் நேற்றுக்காலை தேடுதல் வேட் டையை மேற்கொண்டு வெடிமருந் துகளையும் ஆயுதங்களையும் கைப்பற்றினர். (தி-2)

## நக்ஸலைட்டுக்கள் இருவர் பலி

(ஸ்ரீநகர்)

ஆந்திர மாநில முதலமைச்சர் சநதிர பாபு நாயுடுவை கொலை செய்ய கடந்த சில மாதங் களுக்கு முன் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை நடத்தியவர்கள் எனக் குற்றஞ்சாட்டப்பட்ட நக்ஸலைட் தீவிரவாதிகள் இருவரை பொலிஸார் சுட்டுக்கொன்றுள்ளனர். (தி-2)

## குறியஸ் அமைப்பின் தலைவர்

### அணுத்திட்ட இரகசிய விற்பனை தொடர்பாக

## பாகிஸ்தான் விஞ்ஞானிகள் மீது விசாரணை நடத்தப் பணிப்பு

(பொ்ன்)

பாகிஸ்தான் விஞ்ஞானிகள் அணுத்திட்டம் தொடர்பான இரகசியங்களை ஈரானுக்கு விற்பனை செய்தார்கள் என்ற குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக திறந்த விசாரணை நடைபெறுவதாக ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப் தெரிவித்துள்ளார்.

சுவிட்ஸர்லாந்தில் நடைபெற்ற பொருளாதார அமைப்பின் மாநாட்டில் கலந்துகொண்டுள்ள பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப் ஊடகம் ஒன்றிற்கு அளித்த பேட்டியிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் அணுவாயுத தந்தையெனக் கருதப்படும் அப்துல்கானை விஷேடமாக விசாரணை செய்ய உத்தரவிட்டுள்ளேன்.

தனிப்பட்ட ரீதியில் பொருளாதாரத்திற்காக பாகிஸ்தான் யாருக்கும் எந்தவொரு இரகசியத்தையும் விற்கவேண்டிய அவசியம் இல்லையெனவும் அவர் உறுதியாகத் தெரிவித்துள்ளார். (தி-2)

## பெப்ரவரி முற்பகுதியில் மக்களவை முற்றிலும் கலைக்கப்படும்

### பா.ஜ.க. பொதுச் செயலர் அறிவிப்பு

(சென்னை)

அடுத்த மாத முதல் வாரத்தில் மக்களவை முற்றிலுமாகக் கலைக்கப்படும் என்று பாரதிய ஜனதாக் கட்சி தெரிவித்துள்ளது.

ராஜஸ்தான் தலைநகர் ஜெய்ப்பூரில் செய்தியாளர்களிடம் பேசிய பா.ஜ.க. பொதுச் செயலாளர் பிரமோத் மகாஜன் இது குறித்து மேலும் கூறுகையில்,

தாம் குறிப்பிட்டபடி மக்களவை கலைக்கப்பட்டதும் புதிய மக்களவை உருவாகும் வகையில் உடனடியாகத் தேர்தல் நடத்த வேண்டியது தேர்தல் ஆணையத்தின் கடமை என்று வலியுறுத்தியுள்ளார்.

மக்களவைக்குத் தேர்தல் நடத்தப்படும் அதே நேரத்தில் ஆந்திரா, கர்நாடகா, சிக்கிம், மகாராஷ்டிரா ஆகிய 4 மாநில சட்டப் பேரவைகளுக்கும் தேர்தலை நடத்திமுடிக்குமாறு தேர்தல் ஆணையத்திற்கு அவர் கோரிக்கை விடுத்தார்.

இதன் மூலம் வீண் செலவுக

## தமிழக அரசு தாக்கல் செய்த ஆட்சேபனை மனு தள்ளுபடி

(சென்னை)

"பொடா" மறு ஆய்வுக் குழுவின் அதிகார வரம்பு பற்றி தமிழக அரசு விடுத்திருந்த ஆட்சேபனை மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

சென்னை நீதிமன்ற நீதிபதி

டதிலிருந்து தமிழக அரசு அதனைத தவறாகவே பயன்படுத்தி வருகின்றது.

இச்சட்டத்தின் கீழ் பலரைக் கைது செய்துள்ளது. இவர்கள் கைது செய்யப்பட்டதற்கான தகுந்த ஆதாரங்கள் உள்ளவா? என்றும் அதனைத

புதுடில்லியில் நடைபெறவுள்ள இந்த வைபவத்தில் ஜனாதிபதி அப்துல்கலாம் ,பிரதமர் வாஜ்பாய்

வெடிமருந் துகளையும் ஆயுதங்க ளையும் கைப்பற்றினர். (தி-2)

## குறியஸ் அமைப்பின் தலைவர் தனது கோரிக்கையை கைவிட்டார்

(புதுடில்லி)

ஜம்மு-காஷ்மீர் மக்களின் சுய நிர்ணய உரிமையை அறிய கருத்து வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை கைவிடுவதாக குறியஸ் அமைப் பின் தலைவர் மௌலானா அப் பாஸ் அன்ஷாரி கூறியுள்ளார்.

தொலைக்காட்சி ஒன்றுக்கு இவ்வாறு பேட்டியளித்த மௌ லானா அன்ஷாரி, இது விடயத்தில் அனைத்து தரப்பினருடனும் பேச்சு வார்த்தை நடத்தி அனைவருக்கும் ஏற்புடைய தீர்ப்பை எட்டுவதையே குறியஸ் அமைப்பு விரும்புகிறது என்றார். (து-2)



குடியரசு தினமான இன்று சென்னை மெரீனாவில் நடைபெறவிருக்கும் அணிவகுப்பு ஒத்திகையில் இடம்பெறவுள்ள நவீன ஏவுகணை.

வின் அதிகார வரம்பு பற்றி தமிழக அரசு விடுத்திருந்த ஆட்சேபனை மனு தள்ளுபடி செய்யப்பட் டுள்ளது.

சென்னை நீதிமன்ற நீதிபதி சஹாரியா தலைமையிலான 3பேர் கொண்ட குழு இந்த மனுவைத் தள் ளுபடி செய்துள்ளது.

ஆதாரங்களைச் சமர்ப்பிக்கு மாறு நீதிமன்றக் கட்டளைகளை அனுப்புவது நீதிமன்ற நடவடிக் கைகளில் தலையிடும் செயலென தமிழக அரசு கூறுவது தவறு என்று குறிப்பிட்டு நீதிபதிகள் குழு இந்த மனுவைத் தளளுபடி செய்துள்ளது.

பொடாச் சட்டம் அமுலாக்கப்பட் டதிலிருந்து தவறாகவே பயன்படுத்தி வருகின் றது.

இச்சட்டத்தின் கீழ் பலரைக் கைது செய்துள்ளது. இவர்கள் கைது செய்யப்பட்டதற்கான தகுந்த ஆதா ரங்கள் உள்ளனவா? என்றும் அதனைத தமக்கு நிரூபிக்குமாறு பொடா மறு ஆய்வுக்குழு தமிழக அரசிற்கு நோட் டீஸ் அனுப்பியுள்ளது.

இதற்கு ஆட்சேபனை தெரி வித்தே தமிழக அரசு ஆட்சேபனை மனுவை நீதிமன்றில் தாக்கல் செய திருந்தமை இங்கு குறிப்பிடத்தக் கதாகும். (தி-2)

கர்நாடகா, சிக்கிம், மகாராஷ்டிரா ஆகிய 4 மாநில சட்டப் பேரவை களுக்கும் தேர்தலை நடத்திமுடிக்கு மாறு தேர்தல் ஆணையத்திற்கு அவர் கோரிக்கை விடுத்தார்.

இதன் மூலம் வீண் செலவுக ளைத் தடுக்கலாம் என்று கூறினார்.

வாஜ்பாயின் தலைமை மற்றும் தேசிய ஜனநாயகக் கூட்டணி அர்சின் சாதனைகளை முன நிறுத் தியே ம்க்களளைவைத் தேர்தல் பிர சாரம் அமையும் என்றும் பிரமோத் மகாஜன் மேலும் தெரிவித்துள் ளார். (தி-2)

## ஒபஜ்ஜூனிற்றி விண்கலம் செவ்வாய்க்கிரகத்தில


(வாஷிங்டன்)

ஒபஜ்ஜூனிற்றி என்றழைக்கப் படும் அமெரிக்க விண்வெளி அமைப் பான நாஸாவின் 2வது விண்கலம "மார்க்" எனப்படும செவ்வாய்க்கிர கத்தை சென்றடைந்துள்ளது.

6 சக்கரங்கள் உள்ள இந்த விண் கலம் செங்கோளிலுள்ள மெரி யானி பிளானம் என்ற இடத்தில் இறங்கியுள்ளது.

மார்க் செங்கோளில் உயிர களின் வாழ்விற்கு வாய்ப்பு உண்டா? என் பதைக் கண்டறியும் ஆய்வில் இந்த ஒபஜ்ஜூனிற்றி விண்கலம் 90 நாட் களுக்கு முனைப்புடன் ஈடுபடவுள் ளது என தெரிவிக்கப்படுகிறது. (தி-2)

உல்லாசப் பயணிகளின் வர வினை அதிகரிக்கும் நோக் கில் பாரிஸில் உள்ள உலக அதிசயங்களில் ஒன்றான ஈபிள் கோபுரம் முதல் முறை யாக ஒளி விளக்குகளால் அலங்கரிக்கப் பட்டுள்ளது.



# ரணிலின் தன்னிச்சையான போக்கே ஜனாதிபதியை சினம் கொள்ள வைத்தது

## மேல் மாகாண ஆளுநர் அலவி மௌலானா தெரிவிப்பு

(கொழும்பு)

**பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் முன்னெடுக்கப்பட்டுவந்த சமாதான நடவடிக்கைகளில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பங்காளராக செயற்படாது பார்வையாளராகச் செயற்பட்டு வந்தமையினாலேயே சமாதான நடவடிக்கைகள் தோல்வி கண்டது என மேல் மாகாண ஆளுநர் அலவி மௌலானா தெரிவித்துள்ளார்.**

இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தினால் நடாத்தப்பட்டு வரும் "விடியும் வேளை" நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே இதனை தெரிவித்துள்ளார்.

அலவி மௌலானா தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியை சமாதான நடவடிக்கைகளில் பங்கு கொள்ளுமாறு அழைப்பு விடுத்திருந்தால் அவர் அதனை ஏற்றிருப்பார். சமாதானப் பேச்சுவார்த்தைகளும் தொடர்ந்து நடைபெற்றிருக்கும்.

ஆனால் பிரதமர், ஜனாதிபதியை பங்காளராகக் கலந்துகொள்ளாது பார்வையாளராக இருக்கும் வகையில் சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் சென்றுள்ளார்.

அரசின் பிரதிநிதிகளுக்கும் விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையில் சர்வதேச நாடுகளில் குறிப்பாக ஒஸ்லோவில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் என்ன பேசப்பட்டது என்ன விடயங்களை புலிகள் முன்வைத்தார்கள்? என்பது பற்றி ஜனாதிபதிக்கு எதுவும் தெரியாது.

பிரதமர் கூறுவதைத் தான் ஜனாதிபதி கேட்டாரே தவிர ஜனாதிபதிக்கு உண்மையான விடயங்கள் எதுவும் தெரியாது.

அதுமட்டுமன்றி தமிழீழ விடுதலைப்புலிகள் கோரி வரும் இடைக்கால நிர்வாக சபை குறித்து அரசாங்கம் முன்வைத்துள்ள யோசனைகள் பற்றிக்கூட ஜனாதிபதியுடன் ஆராயப்படவில்லை.

### ஜனாதிபதியை அவமதித்தார்

நாட்டின் தலைவியும் நிறைவேற்று அதிகாரங்கொண்டவருமான ஜனாதிபதியை இவ்வாறு அவமதித்துவிட்டு அரசு சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வது மிகத் தவறான செயலாகும்.

இதேவேளை, இனவாதக்கட்சியான ஜே.வி.பி. கூட இன்று அரசியல் நீரோட்டத்தில் இறங்கி நாட்டில் நிலவும் நெருக்கடி நிலைக்கு தீர்வு காண்பதற்கு ஒத்துழைக்குமாறும் தம்முடன் இணைந்து செயற்படுமாறும் சகல அரசியல் கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்திருக்கின்றது ஏன்? தமிழீழ விடுதலைப் புலிகளுடன்கூட தாம் இது பற்றிப் பேசப்போவதாக கூறியிருக்கின்றது.

பிரதமர் ரணில்விக்கிரமசிங்கவும் அவரது அரசாங்கமும் சகல அரசியல் கட்சிகளையும் ஓரங்கட்டிவிட்டு விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியமை அரசியல் பாரம்பரியத்தை அவர்கள் சரிவர மதிக்கவில்லை என்பன வெளிக்காட்டி இருக்கின்றது.

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளில் அனைத்துக் கட்சிகளில் பங்கு பற்றுவதற்கான வாய்ப்பை அரசு வழங்க வேண்டும். அதிலும் குறிப்பாக எதிர்க்கட்சி தரப்பில் முக்கிய பிரதிநிதிகளை யாவது சேர்த்துக்கொள்ள அரசு முன் வரவேண்டும்.

### சிறுபான்மையினர்க்கு பாதிப்பு ஏதுமில்லை

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கும், மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையே அண்மையில் செய்து கொள்ளப்பட்ட கூட்டமைப்பு உடன்படிக்கையினால் சிறுபான்மையினத்தவர்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என்பதே எனது எதிர்பார்ப்பு.

உடன்படிக்கை ஒப்பந்தத்தில் மேற்குறிப்பிட்ட இரு கட்சிகளும் கைச்சாத்திட்ட பின்னர் கூட்டு அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தன அந்த அறிக்கையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண தமிழீழ விடுதலைப்புலிகளுடனும் பேசுவோம் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

எனவே இந்த இனப்பிரச்சினை விவகாரத்தில் அவர்கள் அதிக கவனம் செலுத்தியிருப்பதால் சிறுபான்மையினத்தவர்களான தமிழ் பேசும் மக்கள் இவ்விடயம் குறித்து அச்சம் கொள்ளத் தேவையில்லை.

### கூட்டமைப்பதில் தப்பில்லை

இதற்கிடையில், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கும் மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையே செய்து கொள்ளப்பட்ட கூட்டமைப்பு ஒப்பந்தம் ஒரே இனம் சார்ந்த இரு கட்சிகளுக்கு இடையில் செய்துகொள்ளப்பட்டது.

4 தமிழ்க்கட்சிகள் ஒன்று சேர்ந்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை உருவாக்கியது போல ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் மக்கள் விடுதலை முன்னணியும் ஒன்று சேர்ந்து மக்கள் ஐக்கிய சுதந்திர முன்னணியை உருவாக்கியுள்ளன.

எனவே, இது தொடர்பில் மக்களின் அமைதியைக் குழப்பும் வகையில் சில சக்திகள் மேற்கொண்டு வரும் விஷமத்தனமான பிரசாரங்களை மக்கள் நம்பக்கூடாது.

பொதுத் தேர்தல் ஒன்று நடைபெறும் பட்சத்தில் மக்கள் ஐக்கிய சுதந்திர முன்னணி அதிக வாக்குகளைப் பெற்று வெற்றிபெற்றால் சிறுபான்மை இனத்தவர்களின் நிலை கவலைக்கிடமாகும் என்றும், அவர்களின் பிரச்சினைக்கு உரிய தீர்வு கிடைக்காது என்றும் தமிழ் அரசியல் கட்சிகளைச் சேர்ந்த சிலர் கூறிவருகின்றனர்.

### உதாசீனம் செய்ய முடியாது

உண்மையிலேயே சிறுபான்மையினத்தவர்களின் ஆணையைப் பெற்று ஆட்சிக்கு வரும் எந்த அரசும் அவர்களின் அபிலாஷைகளை உதாசீனம் செய்துவிட முடியாது.

அரசியல் யாப்பில் சில திருத்தங்களை மேற்கொண்டால் இனப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வுகாண முடியும் எனப் பலர் சுட்டிக்காட்டி வருகின்றனர். இதனை நான் வரவேற்கின்றேன். இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு அரசியல் யாப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள சில விடயங்கள் தடையாக இருக்கின்றதென்றால் கட்டாயம் அரசியல் யாப்பு திருத்தி அமைக்கப்பட வேண்டும்.

இதற்கிடையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மூன்று பிரதான அமைச்சுக்களை கடந்த நவம்பர் மாதம் 4ஆம் திகதி பொறுப்பேற்றது போன்று மேலும் பல அமைச்சுக்களைப் பொறுப்பேற்கும் சாத்தியம் இருப்பதாக சில அரசியல்வாதிகள் கூறிவருகின்றனர்.

### நாட்டின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டது

நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொருட்டே ஜனாதிபதி பாதுகாப்பு மற்றும் அதனோடு சார்ந்த உள்துறை, தொடர்பாடல் ஆகிய அமைச்சுக்களை பொறுப்பேற்றார். இதனை சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட அரசாங்கம் ஜனாதிபதி சமாதான நடவடிக்கைகளைக் குழப்புவதற்காகவே இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டார் என அவர்மீது வீண்பழியைச் சுமத்திவிட்டு சமாதான நடவடிக்கையில் இருந்து பின்வாங்கிவிட்டது.

எனவே ஜனாதிபதி மேலும் அமைச்சுக்களைப் பொறுப்பேற்று வீணான குற்றச்சாட்டுக்களை சுமக்கமாட்டார் என்றே எதிர்பார்க்கிறேன். அவ்வாறு ஏனைய அமைச்சுக்களை பொறுப்பேற்கும் தேவையும் தற்போது இல்லை என்றார். (உ-60,10)

# திடீர் கசிப்பு வேட்டை பத்துப்பேர் சிக்கினர்

உரும்பிராய் மேற்கு அன்னங்கைப்பகுதியில் இடம்பெறும் அதிகரித்திருந்த கசிப்பு உற்பத்தியை அறிந்த கோப்பாய்ப் பொலிஸார் அப்பகுதியைத் திடீர் முற்றுகையிட்டு சூத்திரதாரிகள் பலரைக் கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்தியுள்ளனர்.

கடந்த 10 ஆம் திகதி முதல் 23ஆம் திகதி வரையில் அன்னங்கைப் பகுதியில் திடீர் கசிப்பு வேட்டையினை மேற்கொண்ட கோப்பாய் பொலிஸ் நிலைய அதிகாரி அருணகிரி ஹி செல்வம் தலைமையிலான பொலிஸ் குழுவை கசிப்பு மற்றும் கோடா ஆகியவற்றை உற்பத்தி செய்தோர், அருந்தியோர், தம்வசம் வைத்திருந்தோர் என்ற குற்றத்தின் பேரில் பத்துப் பேரை கைது செய்து யாழ் .நீதிமன்றில் ஆஜர் படுத்தியுள்ளது.

இவர்களிடம் இருந்து 1 லட்சத்து 15 ஆயிரம் ரூபா தண்டப் பணமாக அறவிடப்பட்ட துடன் சிலருக்கு சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது.

(உ-84)

# குடாநாடு கொலைக்களமாகிறது

## பொது அமைப்புகளின் ஒன்றியம் அறிக்கை

யாழ். குடாநாடு எப்போது இலங்கை ஆயுதப்படைகளின் கட்டுப்பாட்டின் கீழ் வந்ததோ! அன்றிலிருந்து இன்றுவரை

கொலைகள் தொடர்பாக போதிய நடவடிக்கை எடுத்துள்ளார்களா? குற்றவாளிகள் கைது செய்யப்பட்டனரா? கொலைகள் தொடர்

மக்கள் மிகவும் விழிப்பாக இருந்து தீய சக்திகளின் செயலை முறியடிக்கவேண்டும் என யாழ்ப்பாண மாவட்ட வெகுஜன அமைப்பு

# கிட்டுவின் நினைவு தினம்

யாழ். குடாநாடு எப்போது இலங்கை ஆயுதப்படைகளின் கட்டுப்பாட்டின் கீழ் வந்ததோ! அன்றிலிருந்து இன்றுவரை கொலைக்களமாக மாறியுள்ளது. யாழ்ப்பாண மக்களின் அமைதி, சுதந்திரம் அடியோடு பிடுங்கப்பட்டு விட்டது. அப்பாவிக் குடிமகனின் உயிர் இனந்தெரியாதோரால் பறிக்கப்படுவதும் தொடர்கதையாகி விட்டது என யாழ். மாவட்ட வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது குறித்து அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த தை 14ஆம் திகதி சாவகச்சேரி கனகம்புளியடிப் பகுதியில் வசித்து வந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் வெட்டிக் கொல்லப்பட்டுள்ளனர். இக் கொலைகள் தொடர்பாக யாரும் கைது செய்யப்படவில்லை. அதேபோன்று ஏற்கனவே நடந்துள்ள கொலைகளின் குற்றவாளிகளும் கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

யாழ்.குடாநாட்டில் அதிகரித்து வரும் சமூகச் சீர்கேடுகள்,தீய சக்திகளின் திட்டமிட்ட கொலைகள் தொடர்பாக மக்கள் பெரிதும் விசனமடைந்துள்ளனர். இது குறித்து தமது உணர்வலைகளை எம்மிடம் பகிர்ந்து கொண்டுள்ளனர்.

ஆதலால் இவ்வாறான தீய சக்திகளின் கொடூரமான செயல்களை யாழ். மாவட்ட வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் ஆழமாக ஆராய்ந்து வருகிறது.

பொலிஸார் இவ்வாறான கொலைகள் தொடர்பாக போதிய நடவடிக்கை எடுத்துள்ளார்களா? குற்றவாளிகள் கைது செய்யப்பட்டனரா? கொலைகள் தொடர்வதன் பின்னணி என்ன? இவ்வாறான கொலைகள் தடுக்க பொலிஸாரால் முடியவில்லையா? என்பன குறித்து பொலிஸார் மீது மக்கள் அவநம்பிக்கை கொண்டுள்ளனர்.

இவ்வாறான கொலைகளுக்கு இலங்கை அரசு தான் பொறுப்பேற்கவேண்டும். விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இவ்வாறான கொலைகளோ, குற்றச் செயல்களோ அல்லது சமூகச் சீர்கேடுகளோ நடப்பதைக் காணமுடியாது. அவ்வாறு எங்காவது ஓர் மூலையில் எப்போதாவது ஓர் நாள் நடைபெற்றாலும் குற்றவாளிகளை தமிழீழக் காவல்துறையினர் கண்டு பிடித்து விடுகின்றனர். அவர்களது கடமையுணர்வை அனைவரும் பாராட்டுகின்றனர். ஆனால், யாழ். குடாவின் நிலை பெரிதும் கவலையைளிப்பதாகவுள்ளது.

சாவகச்சேரி கனகம்புளியடியில் ஓர் குடும்பம் பூண்டோடு அழிக்கப்பட்டுள்ளது. கணவன், மனைவி, மகன் இரவோடிரவாக வெட்டிச்சாய்க்கப்பட்டுள்ளனர். அவர்களது உறவினர் தவிப்புக்கு யார் எதிர்வு கூறுவது. அநியாயமான கொலைகளை நாம் வெறுமனே பார்த்துக் கொண்டிருக்க முடியாது. தமிழ் மக்களின் நிம்மதியான வாழ்வுக்கும் பாதுகாப்பிற்கும் பொலிஸார் உத்தரவாதம் இல்லை. இது தொடர்பாக எமது முயற்சிகள் தொடரப்படும். தமிழ் மக்கள் மிகவும் விழிப்பாக இருந்து தீய சக்திகளின் செயலை முறியடிக்கவேண்டும் என யாழ்ப்பாண மாவட்ட வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் இவ்வறிக்கை மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (தி)

## மணவாளக்கோல விழா

(யாழ்ப்பாணம்)

கச்சேரி நல்லூர் வீதியில் உள்ள பாணன்குளம் நாச்சி அம்மன் ஆலய நவோத்தர சகஸ்ர சங்காபிஷேகமும் மணவாளக் கோல விழாவும் நாளை செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளது.

மதியம் அன்னதானமும் மாலை அம்பாள் வீதி உலாவும் இடம்பெற விருப்பதும் குறிப்பிடத்தக்கது. (உ)

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை மு.ப.10.00மணிக்கு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ். செல்வநாயகம் தலைமையில் இடம்பெறவுள்ள இக்கூட்டத்திற்கு அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் அழைக்கப்பட்டுள்ளார்கள். (உ-75)

# கிட்டுவின் நினைவு தினம் சுவிஸில் அனுஷ்டிப்பு

(கிளிநொச்சி)

மூத்த தளபதி கேணல் கிட்டு உட்பட 10 மாவீரர்களின் 11 ஆம் ஆண்டு நினைவு தின நிகழ்வுகள் சுவிட்சர்லாந்தின் லிப்டன் மாநகரில் நேற்று முன்தினம் உணர்வு பூர்வமான எழுச்சியுடன் கொண்டாடப்பட்டன.

தமிழீழ தேசியக் கொடி ஏற்றலுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்நிகழ்வில் மூத்த தளபதி கேணல் கிட்டு உட்பட 10 மாவீரர்களின் திருவுருவப்படங்களுக்கும் மலர்மாலை அணிவித்து அகவணக்கம் செலுத்தப்பட்டது.

தொடர்ந்து “நவம்” அறிவுப்பீட பொறுப்பாளர் கலைக்கோன் சிறப்புரை ஆற்றினார். இந்நிகழ்வில் அங்கு புலம்பெயர்ந்து வாழும் ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் கலந்துகொண்டனர். (தி-64,10)

## பாடசாலைகளுக்கு விஜயம்

(ஊர்காவற்றுறை)

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என். மதனராஜா, தீவுப் பகுதியில் உள்ள பாடசாலைகள் பலவற்றுக்கும் அண்மையில் விஜயம் செய்து அவற்றின உண்மை நிலைவரங்களை ஆராய்ந்துள்ளார். (உ-75)


## சிறுவர் இல்ல அனுமதி 2004

**வறுமைக்கோட்டின் கீழ் வாழுகின்ற தாய் அல்லது தந்தை அல்லது இருவரையும் இழந்த 5-12 வயதிற்கு இடைப்பட்ட ஆண்பிள்ளைகளை எமது அமைப்பான இருபாலை மக்கள் நலன் காக்கும் பிரிவுடன் இணைத்துக் கொள்ளுங்கள்.**

## மேலதிக விபரங்களுக்கு

**மக்கள் நலன் காக்கும் பிரிவு**
**இருபாலை சந்தி,**
**கோப்பாய்.**

(C/7308)

பொது சன நூலகம்

## இன்று ஒரு தகவல்

# கூந்தல்

"ஏன் சார்? கூந்தலைப் பாதுகாப்பதற்கு என்ன வழி?" என்று என்னிடம் வந்து கேட்டார் ஒரு அம்மா. அவர் அப்படிக் கேட்டதில் ஒன்றும் ஆச்சரியமில்லை. ஆனால் அந்தக் கேள்வியை என்னிடம் வந்து கேட்டார் பாருங்கள். அதுதான் ஆச்சரியம். நானும் உடனே ஒரு எண்ணெயின் பேரைக்கூறி "அந்த எண்ணெயை தினமும் தலையில் தடவி வாருங்கள்" என்றேன். "எதனால் குறிப்பாக அந்த எண்ணெயைத் தடவச் சொல்கிறீர்கள்?" என்று கேட்டார். நான் தினமும் அதைத் தான் உபயோகப்படுத்துகின்றேன்" என்றேன். அவர் நிமிர்ந்து எனது தலையைப் பார்த்தார். "அப்படியென்றால் அது வேண்டாம் சார்! வேறு ஏதாவது யோசனை இருந்தால் கூறுங்கள்" என்றார்.

நான் உடனே என் யோசனையை வாபஸ் வாங்கிக் கொண்டு நிபுணர்கள் கூறும் ஆலோசனையை அவரிடம் சொல்ல ஆரம்பித்தேன். பொதுவாகப் பெண்களுக்கு முடி கொட்டுவதற்கான முக்கிய காரணம் என்ன? பலமான காற்று-கடுமையான வெயில் அடிக்கடி தலையில் பட்டுக்கொண்டிருந்தால் முடி கொட்டும். சாதாரண சோப்பை அடிக்கடி தலையில் தேய்த்தாலும் முடி கொட்டும். மிக முரடாக இருக்கின்ற கூந்தல் பிரஷ்ஷை உபயோகித்தாலும் முடி கொட்டும். சத்தான உணவு சாப்பிடாவிட்டாலும் முடி உதிரும்.

உடலில் ஓமோன்களின் அளவு சரியாக இல்லாமல் இருந்தால், மன இறுக்கத்தில் இருந்தால், உடல் நிலையில் மாறுதல் ஏற்பட்டால், கூந்தலை சரியான முறையில் பராமரிக்காவிட்டால் முடி கொட்டும். சரி... இதெல்லாம் இருக்கட்டும் கூந்தலை எப்படிச் சரியான முறையில் பராமரிப்பது?

சரியான சத்துள்ள உணவைச் சாப்பிட வேண்டும். பழம், பச்சைக் காய்கறிகள், முட்டை, பருப்பு வகை இவற்றில் எது யாருக்குப் பொருத்தமோ அதை அவர்கள் சாப்பிடலாம். ஆகாரத்தில் சத்து குறைந்தால் "இவரின் தலையில் நான் இருந்து என்ன பயன்?" என்று தலைமுடி நினைக்க ஆரம்பித்து விடும்.

உடலில் அளவுக்கு மீறிய அயர்ச்சி ஏற்பட்டாலும் முடி உதிருமாம். இந்த அயர்ச்சியைப் போக்குவதற்கு தினமும் உடற்பயிற்சி செய்யவேண்டும். தினமும் திறந்த வெளியில் காற்றோட்டமான இடத்தில் நடப்பது நல்லது. அவசியமானால் தினமும் கூந்தலை நீரினால் அலசலாம். லேசான இளஞ்சூடான நீரையே உபயோகிக்க வேண்டுமாம். மிருதுவான ஷாம்பூவை உபயோகப்படுத்த வேண்டுமாம். அது எவ்வளவு மிருதுவான தரமாக உள்ளதோ அவ்வளவிற்கு அது கூந்தலுக்கு நல்லதாம். ஷாம்பூ உபயோகப்படுத்துவது எப்படி என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

முதலில் கூந்தலை நன்றாக நனைத்துக் கொண்டு அதன்பின் கையில் சிறிது ஷாம்பூவை எடுத்துக் கூந்தலில் பரவலாகத் தடவ வேண்டும். விரல் நுனியால் நகம் படாமல் தலையின் முன்பக்கத்திலிருந்து பின்புறம் வரை சில நிமிடங்களுக்குத் தேய்க்கலாம்.

கூந்தலை தானாகவே உலர விடுதுதான் நல்லதாம். அவசரமாகக் காயவைக்க வேண்டும் என்று சிலர் அதற்கு என்று இருக்கும் உலர வைக்கும் கருவியை உபயோகப்படுத்துவார்கள். அதை தலைக்கு 15 சென்ரிமீற்றர் தூரத்தில் பிடிக்கவேண்டுமாம்.

தலையில் ஒரே இடத்தில் பிடிக்கக்கூடாது. ஒரு இடத்தில்

# யுத்த நிறுத்த உடன்படிக்கை குறித்து மக்கள் மத்தியில் அவநம்பிக்கை

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

(அனுராதபுரம்)

தற்போது நாட்டில் யுத்தம் நடைபெறாது போனாலும் யுத்த நிறுத்த உடன்படிக்கை தொடர்பாக மக்கள் மத்தியில் நம்பிக்கையற்ற தன்மையே காணப்படுகிறது. யுத்த நிறுத்த உடன்படிக்கை தொடர்ந்தும் அமுலில் இருக்குமானால் நாட்டின் அபிவிருத்தியில் பெருமளவு முன்னேற்றம் ஏற்படக்கூடியதாக இருக்கும். இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அனுராதபுரத்திற்கு நேற்று முன்தினம் சென்றிருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அங்கு பல்வேறு கூட்டங்களில் கலந்துகொண்டு பேசினார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றும்போது கூறியதாவது,

அரசும் - விடுதலைப் புலிகளும் செய்து கொண்ட ஒப்பந்தத்தினைப் பாதுகாக்கவேண்டும். தற்போது போர் நிறுத்த உடன்படிக்கை கேள்விக் குறியாக இருப்பதனால் இலங்கைக்கான நிதி முதலீட்டை வழங்க விருந்த வெளிநாட்டவரின் வருகையும் வீழ்ச்சியடைந்துள்ளது என்றும் சமாதான முயற்சிகளை மீண்டும் முன்னெடுத்துச் செல்வதற்கு தாம் தயாராக இருப்பதாகவும் பிரதமர் தெரிவித்தார். (ம)



# அரசைக் கவிழ்க்கும் சக்தி புதிய கூட்டணிக்கு உண்டு

## எதிர்க்கட்சித் தலைவர் எதிர்பார்ப்பு

(கொழும்பு)

அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்தவும் மக்களின் வறுமையை நீக்கவுமே மக்கள் ஐக்கிய சுதந்திர முன்னணி உருவாக்கப்பட்டுள்ளது.

மக்களுக்கு விரோதமான கொள்கைகளையும் கோட்பாடுகளையும் அமுல்படுத்திவரும் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தை பதவியில் இருந்து கவிழ்க்கும் சக்தி இந்தக் கூட்டமைப்புக்கு உண்டு.

எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ கரந்தெனியாவில் புதிய பஸ் நிலையம் ஒன்றை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்தார்.



அங்கு தொடர்ந்து பேசிய அவர், இக்கூட்டமைப்பின் மூலம் நாட்டில் தொடர்ந்து இடம் பெற்று வரும் வன்முறைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும்.

அத்துடன், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் முன்னெடுத்துச் செல்லப்பட்ட சமாதான முன்னெடுப்பு முறைகள் பிழையானவை. இம்முறைகளை புதிய கூட்டணி மாற்றியமைத்து சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும்.

மக்கள் ஐக்கிய சுதந்திர முன்னணி உருவாக்கம் குறித்து அரசியல் கட்சிகளும் ஆளும் அரசாங் மும் பல குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருகின்றன.

இக்குற்றச் சாட்டுக்களை நாம் ஒருபோதும் ஏற்கப்போவதில்லை. மாறாக புதிய முன்னணியின் செயற்பாடுகளையும் நடவடிக்கைகளையும் கண்டு அவர்கள் வியப்படைவார்கள். இக்காலம் வெகு விரைவில் வரும் என்றார். (தி-61)

## இராசிபலன்

**26.01. 2004**

**(தை 12, திங்கட்கிழமை)**

| | |
|---|---|
| பஞ்சமி | முன்னிரவு 11.55 வரை |
| பூரட்டாதி | காலை 7.22 வரை |
| இராகுகாலம் | 8.06-09.36 மணிவரை |
| சுபநேரம் | 12.36-02.06 மணிவரை |

சித்த யோகம்

**மேடம்**
உறவினர் வெறுப்பு, பொருள் விரயம், திடீர் நன்மை, காரிய அலைச்சல்.

**இடபம்**
நினைத்த காரியம் கைகூடும், கலந்துரையாடல், பெருமையான சம்பவம், தன இலாபம்.

**மிதுனம்**
தூரதேசச் செய்தி, நல்ல முயற்சி, பிறருக்கு உதவுதல், அதிக பிரயாசை.

# மிதிபலகைப் பயணத்திற்கு முற்றாகவே தடை

(மருதங்கேணி)

கிளிநொச்சி பகுதியில் ஏ-9 வீதியில் மிதிபலகைப்

சரமாகக் காயவைக்க வேண்டும் என்று சிலர் அதற்கு என்று இருக்கும் உலர வைக்கும் கருவியை உபயோகப்படுத்துவார்கள். அதை தலைக்கு 15 சென்ரிமீற்றர் தூரத்தில் பிடிக்கவேண்டுமாம்.

தலையில் ஒரே இடத்தில் பிடிக்கக்கூடாது. ஒரு இடத்தில் சில வினாடிகள் மட்டும் காற்றுப் படும் மாதிரி மாற்றிமாற்றிப் பிடித்துக் காயவைக்க வேண்டும். கூந்தல் ஈரமாக இருக்கும்போது இதை பிரஷ் செய்யக்கூடாது. ஈரமாக இருக்கும்போது அப்படிச் செய்யும்போது கூந்தல் முறிந்து போகுமாம்.

மிருதுவான அதிக இடைவெளியுள்ள சீப்பினால் மெதுவாக கூந்தல் நுனியிலிருந்து தலையை நோக்கிச் சீவச் சொல்கின்றனர். தலையில் எண்ணெய்ப்பசை அதிகமாக இருப்பதனால் பொடுகு ஏற்படும். பொடுகு இருந்தால் உடனே அதைப் போக்குவதற்கான வழியைப் பார்க்க வேண்டும்.

கூந்தலுக்கு நாம் அதிக தொந்தரவு கொடுக்கக்கூடாது. அழுத்தமாகக் கட்டி இறுக்கமாகக் கொண்டை போட்டு அதில் இரும்பாலான கொண்டை ஊசிகளைச் செருகக் கூடாது. வெயிலில் போகவேண்டி இருந்தால் குடையை எடுத்துக் கொண்டு போங்கள். இல்லாவிட்டால் தலையில் ஏதாவது கட்டுங்கள். கூந்தல் பாதுகாப்பிற்கென்று பல போலியான விளம்பரங்கள் வரும். அவற்றை நம்பாதீர்கள்.

இவ்வளவும் கூந்தல் சம்பந்தப்பட்ட நிபுணர்கள் கூறும் யோசனைகள்! என்னிடம் வந்து விளக்கம் கேட்டவரிடம் இவ்வளவையும் விபரமாகக் கூறினேன். நன்றி கூறி எழுந்தார். ஒரு பெருமூச்சு விட்டார். ஏன் என்று கேட்டேன். "ஒரு காலத்தில் என் கூந்தல் எப்படி இருந்தது தெரியுமா சார்... இந்தக் கூந்தல் தரையைத் தொடும் அளவிற்கு இருந்தது" என்றார். " எனக்கும் அப்படித்தான் தலைமுடி தரையைத் தொடும்" என்றேன் பெருமையாக. " அப்படியா"? என்றார் மிகவும் ஆச்சரியமாக! "ஆமாம்! தரையில் படுத்திருக்கும்போது" என்றேன் அசடு வழிய.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

யாடல், பெருமையான சம்பவம், தன இலாபம்.

**மிதுனம்**

தூரதேசச் செய்தி, நல்ல முயற்சி, பிறருக்கு உதவுதல், அதிக பிரயாசை.

**கடகம்**

புதிய திட்டமிடல், கட்டுப்பாடு, காரிய தாமதம், புத்தி சாதுர்யம்.

**சிங்கம்**

காரிய தடை, உடல் நலக்குறைவு, வாகன பயம், போசன சுகம்.

**கன்னி**

தொழில் விருத்தி, பிரயாணம், குடும்ப மகிழ்ச்சி, முயற்சி கைகூடும்.

**துலாம்**

தொழில் வருமானம், உடல் நலம், தடைப்பட்ட காரியம் கைகூடும், உறவினர் சந்திப்பு.

**விருச்சிகம்**

இடமாற்றம், ஆரோக்கியக்குறைவு, பணத் தட்டுப்பாடு, வியாபார நன்மை.

**தனுசு**

காரிய தாமதம், சிந்தனை மிகுதி, மாதா சுகம், ரோக பயம்.

**மகரம்**

நல்ல வருமானம், அதிக பிரயாசை, பிரயாண அனுகூலம், அந்நியர் சந்திப்பு.

**கும்பம்**

தன விரயம், தொழில் முயற்சி, நண்பர் சந்திப்பு கௌரவக்குறைவு.

**மீனம்**

கற்பனை மிகுதி, போசன சுகம், முயற்சி கைகூடும், தொழில் விருத்தி.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

# மிதிபலகைப் பயணத்திற்கு முற்றாகவே தடை

(மருதங்கேணி)

கிளிநொச்சி பகுதியில் ஏ-9 வீதியில் மிதிபலகைப் பயணம் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

இப்பாதையில் அடிக்கடி இடம்பெறும் வீதி விபத்துக்களைத் தடுக்கும் பொருட்டு தமிழீழ காவல் துறையினரால் இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மினி பஸ்கள், பஸ்கள் உள்ளிட்ட எந்த வாகனங்களினதும் மிதிபலகையில் நின்று பயணம் செய்ய வேண்டாமென தமிழீழ காவல்துறையினர் பொது மக்களைக் கேட்டுள்ளனர்.

ஏ-9 வீதியில் போக்குவரத்துக் கண்காணிப்பு நடவடிக்கைகளில் காவல்துறையினர் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கிளிநொச்சி நகரில் ஏ-9 வீதியூடாகப் பயணம் செய்யும் வாகனங்களுக்கு வேகக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது தெரிந்ததே. (உ-35)

# ஆயுதங்களை ஒப்படைக்க உள்துறை அமைச்சு அவகாசம்

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் ஆயுதங்களை வைத்திருப்பவர்கள் அவற்றை ஒருமாத காலத்துள் ஒப்படைக்க வேண்டுமென உட்துறை அமைச்சு அவர்களுக்கு கால அவகாசம் வழங்கியுள்ளது.

தற்போது அதிகரித்து வரும் கொலை மற்றும் கொள்ளைச் சம்பவங்களையும், வன்முறைகளையும் கட்டுப்படுத்துவதற்காக இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக உள்துறை அமைச்சின் மேலதிக செயலாளர் தெரிவித்துள்ளார்.

இவ்வாயுதங்களை ஒப்படைக்கத் தவறுவோர் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸ்மா அதிபர் இந்திரா டி சில்வா அறிவித்துள்ளார்.

நாடு முழுவதும் சுமார் 3இலட்சத்துக்கும் அதிகமான சட்டவிரோத ஆயுதங்கள் புழக்கத்தில் உள்ளன. இவற்றில் கூடுதலானவை இராணுவத்துக்கும்,பொலிசாருக்கும் சொந்தமான வை என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (தி61)

# 2004 புத்தாண்டுப் பலன்

**2004ஆம் ஆண்டில் பன்னிரு ராசிகளுக்கும்
ஜனவரி தொடக்கம் டிசம்பர் வரையான பன்
னிரு மாத பலன்கள் தனித் தனியாகக் கணிக்
கப்பட்டு இங்கு தரப்படுகிறது. பன்னிரு ராசி
களுக்குமான நவம்பர் மாதப் பலன்கள்.**

## கன்னி



**உத்திரம் 2,3,4 வது பாதம் வரை -
அத்தம் 4 பாதங்கள் - சித்திரை 1,2
பாதங்கள் வரை 9 பாதங்கள்.**

இப்போது ஜீவன இல்லத்தில் இடம்
பெற்றிருப்பது சனி. தொழில் சம்பந்
தமாக சில நன்முடிவு எடுத்தலும் உண்டாகும். குடும்
பத்திற்கு நாகரீக பொருள் சேர்க்கை, குழந்தைகளுக்கு
அணிகலன் சேர்க்ககையும் உண்டாகும். ஆதாயமே இருக்
கும். பு,மி, வீடு வாகன நன்மையும் உண்டாகும். பூமி வாங்கு
வதும் ஏற்படும். தேக ஆரோக்கியம் நன்றாக இருக்கிறது.
மதியூகம் புதுமை பலம் பெற்று விளங்கும் மற்றவர் உங்கள்
புறம் வரும் காலம் இது. சொத்துக்கள் வகையில் இருந்த
பிடிப்பான போக்கை உறவினர் மூலம் தீர்த்துக்கொள்ளும்
காலம். குடும்பத்தில் உறவினர் வகையில் இருந்து வந்த
நெருக்கம் அகற்றப்படும். புண்ணிய ஸ்தலப் பிரயாணம்,
தெய்வ வழிபாடு மனதிற்கு திருப்தியான போக்கை உண்டாக்
கும். குடும்பத்துடன் பிரயாணமும் ஏற்க வேண்டியிருக்கிறது.
இதற்கிடையில் உறவினர் வகையில் துற்கரும தகவலும்
கிடைக்கும். திடீர் பிரயாணம் ஏற்பீர். மனைவிக்கு ஆரோக்கி
யம் பாதிப்பும் மருத்துவ சிகிச்சையும் உண்டாகும். சகோ
தர ,சகோதரி வகைக்கு சுபச் செலவுகளும் உண்டாகும்.
வியாரிகள் முதல் விவசாயிகள் வரை இந்த ஆண்டு தொழில
வளர்ச்சி முக்கிய தேவைகளைப் பூர்த்தி செய்தீர்களே தவிர,பண
வளர்ச்சி என்பது குறைவு தான். குழந்தைகள் கல்வி முன்
னேறறம் மன திருப்தியளிக்கும் மறைத்து வைக்கப்பட்ட விஷ
யங்கள சில வெளியாகும். உத்தியோகப் பிரிவு, ஆண்,பெண
களுக்கு பதவிஉயர்வு காலம் தள்ளிப் போய்விடும். ஆனால்
இடமாற்றம் என்பது தள்ளிப்போகாது. பிற்பகுதி ஆதாயமாக
இருக்கும். உத்தியோகப்பிரிவு ஆண், பெண்களுக்கு சலிப்பில
லாமல் உழைப்பபை உண்டாக்கும். சில வகையில் கூட்டு
முயற்சி இப்போது தான் உருவகத்திற்கு வந்திருக்கின்றன.
சற்று வேகமாகப்போங்கள்; வெற்றி உங்களை நெருங்கு
கிறது. எதிலும் தயக்கம் இல்லாமல் செயற்படவும் அலு-
வலக சூழ்நிலையும் மற்றவர்களால் புகழப்படும். மற்றபடி
குடும்பத்தில் இடையிடையே மருத்துவ செலவுகள் இருக்
கும். கலைப்பிரிவு ஆண்,பெண்களுக்கு கௌரவப்பட்டம்
மற்றவர்களால் பாராட்டு போன்றவை இருக்கும். பணம் பற்
றாககுறை இல்லை. பட்டாடை, அணிகலன் சேர்க்கை உண்
டாகும். இதில் பழைய ஆபரணம் வாங்குவதும் முக்கிய
அம்சமாகும். கலைப்பொருட்கள் குடும்பத்திற்கு சேர்க்கை
யும் உண்டாகும். கணவன்,மனைவிஉறவு கவர்ச்சிகரமா
கவே இருக்கிறது. திட்டங்களை துரிதப்படுத்துங்கள். தனம்
கொடுக்கல் வாங்கல் குறித்தபடி கூடி வந்து விடும். கூட்டுத்
தொழில் உள்ளவர்களுக்கு உடனிருப்பவர்கள் ஒத்து
ழைப்பு கணிசமான தன ஆதாயத்தை உண்டாக்கும். குடும்ப
முன்னணி மனதிருப்தி அசையாப்பொருட்களை விற்பது
போன்ற அவசியத்தைப் பெறுவர்.கணவன், மனைவி உறவு
முணுமுணுப்பாக இருக்கும். சகோதர, சகோதரிகள்
முன்னேற்றம் திருப்தியாக இருக்கிறது. உறவினர் வருகை
குடும்பத்தில் அதிக செலவை உண்டாக்கும். தொழில்
வழியில் குடும்பத்தில் தடையில்லை. நடுப்பகுதிக்கு மேல்
காரக்குச்செய்தி மகிழ்ச்சிகரமாக வரும். உத்தியோகத்

பெருமை சுற்றத்தார் வருகை வார்த்தைக்கு மகிழ்ச்சி
பெரியோர் சேர்க்கை, எதிலும் வெற்றி ஆகியவரை குறிப்
பிடத்தக்கது. சிலர் வாகனம் வாங்குவது புதுமனை குடிபுகு
வது போன்ற நன்மைகளும் இருக்கின்றன. தனநிலை
தன்னம்பிக்கையை ஊட்டும் சிலவகையில் உங்களை
பெரிய பொறுப்புக்களில் ஈடுபடுத்திக்கொள்ளப் போகிறீர்கள்
என்பதில் மனச்சலனமின்றி இருக்கவேண்டும். மற்றவர்
வார்த்தைக்கு செவிசாய்க்க வேண்டாம். குடும்பத்திற்கு புது
பொருள் வாங்குவதும் உண்டு. வழக்குப் பற்றிய பயமில்லை
கடனைக்குறித்து கவலைப்படவும் வேண்டாம். அவை
கட்டுக்கடங்கித் தான் இருக்கின்றன. உத்தியோக ரூதர்களுக்கு
தன் குடும்பவகையில் எல்லாம் நன்றாக இருந்தும் உங்களின்
தேகசுகம் கவனிக்கத்தக்கது. நரம்புநோய், இருமல் சீதள
பாதிப்புக்கூட இருக்கும். கணவன், மனைவி உறவு நன்றாகவே
இருக்கும். வழக்கு உள்ளவர்கள் செலவைத்தான் ஏறக

பேச்சு முழுவதும் தான் காரணம். உடல் உஷ்ணம் மிகுதி
யாக இருக்கும். முக்கிய பிரயாணங்கள் இரண்டிருக்கின்றன.
சிலா மூதாதையா் பொருள் குறித்து வழக்கு சம்பந்தமாகவும்
அடிக்கடி பிரயாணத்தை உடையவர்களாகுவீா. ஆகவே, எதிலும்
சிந்தித்து ஒரே சீரான போக்கை உடையவர்களாக இருத்தல்
வேணடும். உத்தியோகப்பிரிவினர்கள் சிலருக்கு இந்த மாதம
இடமாற்றம், இலாகா மாற்றம் போன்றவை இருககின்றன.
பதவி உயர்வு, இலாகா மாற்றத்தையும் பெறுவர். அயல்நாட்
டுக் கடிதத்தைப் பெறுவது, தொழில் வளர்ச்சிக்கு வழி கோலும்.
சுபச்செலவுகள் விருந்துண்பதும் இம்மாதம் முக்கிய
நிகழ்ச்சிகளாகும். கௌரவத்தில் கவனம் எடுத்துக் கொள்ள
வேண்டும். காது ,பல் சம்பந்தமான பிணி பாதிக்கவும் வாய்ப்பு
இருக்கிறது. உத்தியோகப்பிரிவினர்கள் தாங்கள் நினைத்
தபடி சாதனை புரிந்திடுவர். மாணவ ,மாணவிகளுக்கு கல்வி
பெருமை தரும். பயம்வேண்டாம். நல்ல ஆரோக்கியம் உடைய
வர்கள் தான் என்றாலும் இப்போது மிக மிக கவனமாக
பார்க்கவேண்டும்.குறிப்பாக கர்ப்பிணிகள் எச்சரிக்கை
எடுக்க வேண்டும். சிலவகையில் நீங்கள் தனித்து நில்
லாமல் உடனிருப்பவர்களில் பாராட்டு செயல்களை துரிதப்
படுத்துவதாகவும் இருக்கும். குடும்பத்து வேலைகள், மகிழ்ச
சிக்குரிய அளவில் வேகமாக இருக்கும். தாமதப்பட்ட
காரியங்களில் தனவரவும் இருக்கும். சுப விஷயத்தை பூர்த்
தியாக்க நீங்களும் உங்களைச் சேர்ந்தவர் களும் அலைச்

# உங்களுக்கு எப்படி?

வேண்டியிருக்கிறது. சகோதர,சகோதரிவகையில் மன
திருப்தியான போக்கு இருக்கமுடியாது. புத்திரியர்கள் கல்வி
மேன்மையிருக்கும். பொதுவாக குடும்பத்தின் சூழ்நிலை
அமைதியாக இருக்கின்றன. குழந்தைகள் ஆரோக்கியம்
கல்வி நிலையம் திருப்தியாக இருக்கின்றன. சிலர் நாகரீக
வாகனம் குடும்ப வகைக்கு நாகரீகப் பொருட்கள் வாங்குவதும
இருக்கின்றன.

## விருச்சிகம்



**விசாகம் 4 வது பாதம் அனுஷம் 4
பாதங்கள்-கேட்டை 4 பாதங்கள்
வரை 9 பாதங்கள்**

நண்பர்கள் சிலர் உங்கள் புதிய
முயற்சிக்கு ஊக்கமளிப்பவர்களாக
இருப்பர். பெண்கள் குழந்தைகளுக்கும் புதுஉடைகள்
சேர்க்கை நாகரீகப் பொருட்கள் குடும்பத்திற்கு சேர்க்கை
மேலிடத்து அனுகூல உத்தரவு உங்களை உற்சாகப்படுத்
துவதாக இருக்கிறது, குழந்தைகள், கல்வி உயர்வு குறிப்
பிடத்தக்க அளவு இருக்கிறது. கடனிருந்தும் பாதிப்பு
இல்லை. உங்கள் செயல்முறை மட்டும் துரிதப்படுத்தினால்
போதும். அதன் பிறகு நடப்பதெல்லாம் விதி வழியே நடக்கும்.
சில சமயம் குடும்பத்தில் மட்டும் சிறு சிறு இடர்பாடுகள்
உண்டு. அதனைப் படிப்படியே சீர்செய்து விடவும் முடியும்.
அதனால் ஆத்திரப்படவோ அதிர்ச்சியடையவோ வேண்டிய
அவசியம் இல்லை. தொழில்வழி ஆதாயம் சில சமயம்
குறிப்பிட்டதற்கு மேலேயும் இருக்கும். செவ்வாய் உங்கள்
யோக் அதிபதி என்றாலும் சாரத்தால் பலமற்றவனே. எனவே
உறவின் முறையாருடன் சிலசமயம் கருத்து மோதலுக்கும்
வாய்ப்பு இருக்கிறது. இது சகோதரவகையிலும் இருக்க
லாம். எனவே சூழ்நிலையை சாதகமாக்கிக் கொள்ள
வேண்டும். உத்தியோகப்பிரிவினருக்கு அலுவல கத்தல்
பழைய பிரச்சினைகள் சில நன்மை தரக்கூடியதாக வும் இருக்கும்
என்பதால் மேல்மட்ட மனிதர்களின் இத மான அணுகுமுறை
யால் இதனை சீர்செய்து கொள்ள லாம். உங்களுக்கு
முன்பு ஏற்பட்ட தடைகளை விலக்கி விடடது, இதனால்
இப்போது நன்மை பிறந்து இருக்கிறது. உங்கள் நாகரீக
வாகனத்தை மாற்றுவது அல்லது புதுப்பிப் பதும் முக்கிய
இடம்பெறும். நடுப்பகுதிக்கு மேல் எடுத்த தெல்லாம் காரிய
தாமதம் ஆகிறது என அயர்வு கொள்ள வும் நமது
கடமையை தொடர்ந்து நிறைவேற்றுவதில் கருத்துடன்
இருக்கவேண்டும். நீங்கள் பல வேலைப் பிரச் சினைகளில்

சலுடையவர்களே. இதனால் சிலசமயம் உடல் சீதளம்
மருத்துவ சிகிச்சையும் அவசியமும் அவசரமும் ஆகும்.
குடும்ப வேலைகளை படிப்படியே பூர்த்தியாக்கிக் கொண்டு
போகலாம். தூரத்து மனிதர்கள் தொழில் சம்பந்தமான
ஒப்பநதத்திற்கு உறுதுணையாக இருப்பர். குடும்ப வகையில்
வெகு காலமாக முடிக்க முடியாமல் தேங்கிக்கிடந்த சுப
விஷயம் குறித்த சில நல்ல முடிவை இப்போது காணலாம்.
தொழில் சம்பந்தமான எழுத்து வேலைகள முடிக்கப் பெறும்.
சிலருக்கு அரசாங்க ஒப்பந்தங்கள் கூட வரும். உத்தியோகப்
பிரிவினர்களுக்கு ஆரம்பத்தில் இருந்து வந்த சில
நிகழ்ச்சிகள் சலனமாக இருந்தது. மந்திமப்பகுதிக்கு மேல்
தீர்க்கப்பட்டு விடும். கீழ் மட்ட மனிதர்களும் தனக்கு சாதக
மான சூழ்நிலையைப் பெறுவர். குடும்பத்தில் சிலருக்கு
பாகப்பிரிவினை சம்பந்தமான பேச்சுக்களும் முக்கிய இடம்
பெறும். இதில் மூன்றாவது மனிதரின் தலையீடு இல்லாமல்
இருப்பது நல்லது. உங்கள் நாகரீக வாகனத்தை மாற்றுவ தும்
உண்டாகும்.

## மகரம்




**உத்திராடம் 2,3,4வது பாதங்கள்-திரு
வோணம் 4 பாதங்கள்-அவிட்டம் 1,2
பாதங்கள் வரை 9 பாதங்கள்**

இம்மாத ஆரம்பம் சூரியன் நீசனாகி
10ல் கேதுவுடன் சேர்ந்தான். சுக்கிரன்
நீசம்பெற்ற குருவுடன் பாக்கிய இல்லம் பெற்றது சிறப்பினும்
சிறப்பாகும். நன்மைகள் இருக்கின்றன. வழக்கின் தன்மை
இப்போதைக்கு வேகம் இல்லை. தான் பழைய பிரச்சினைகள்
புதிய சிக்கலை உண்டாக்கும். எழுத்து உத்தரவு உங்களுக்கு
எதிராகவும் அமையும். சில மாதம் ஓய்வு கொள்வதும் அவசி
யமாக இருப்பது உங்களை வெற்றியுடையவர்களாக ஆக்கும்
வாகன வகையில் இருந்த சிக்கல் தீரகப்பட்டுவிடும். வழக்கு
மூலம் தாமதப்பட்ட காரியங்களும் வெகு வேகமாக செயல்
முறைக்குக் கொண்டு வந்துவிடலாம். தொழில் வழி புது
மைகளை பற்றி பேசுவது நன் முயற்சியும் உண்டாகும் சிலர்
புதிய வாகனம் வாங்குவது, பழைய வாகனத்தை மாற்றிய
மைததல் அது வழியில் செலவுகளும் உண்டாகும் போட்டி,
பந்தயம் விளையாட்டு போன்றவை முழு நன்மை தராது. குழந்
தைகள் ஆரோக்கியம் கல்வி இந்த வகைகள் கவர்ச்சி
மிக்கதாகவே இருக்கிறது. தூரத்துப்பிரயாணம் தடைப்படும்.
இநத இராசி பெண்களுக்கு பொதுவாகவே ஆரோக்கியப் பாதிப்பு
உண்டாகும், அவசர செலவுகளும் இருக்கின்றன. சில காரியங்
களில் சில சமயம் மூன்றாவது மனிதர்கள் கூடிப்பேசி சுமுக

காலம். குடும்பத்தில் உறவினர் வகையில் இருந்து வந்த நெருக்கம் அகற்றப்படும். புண்ணிய ஸ்தலப் பிரயாணம், தெய்வ வழிபாடு மனதிற்கு திருப்தியான போக்கை உண்டாக்கும். குடும்பத்துடன் பிரயாணமும் ஏற்க வேண்டியிருக்கிறது. இதற்கிடையில் உறவினர் வகையில் துற்கரும தகவலும் கிடைக்கும். திடீர் பிரயாணம் ஏற்பீர். மனைவிக்கு ஆரோக்கியம் பாதிப்பும் மருத்துவ சிகிச்சையும் உண்டாகும். சகோதர ,சகோதரி வகைக்கு சுபச் செலவுகளும் உண்டாகும். வியாரிகள் முதல் விவசாயிகள் வரை இந்த ஆண்டு தொழில வளர்ச்சி முக்கிய தேவைகளைப் பூர்த்தி செய்தீகளே தவிர,பண வளர்ச்சி என்பது குறைவு தான். குழந்தைகள் கல்வி முன்னேறறம் மன திருப்தியளிக்கும் மறைத்து வைக்கப்பட்ட விஷயங்கள சில வெளியாகும். உத்தியோகப் பிரிவு, ஆண்,பெண களுக்கு பதவிஉயர்வு காலம் தள்ளிப் போய்விடும். ஆனால் இடமாற்றம் என்பது தள்ளிப்போகாது. பிற்பகுதி ஆதாயமாக இருக்கும். உத்தியோகப்பிரிவு ஆண், பெண்களுக்கு சலிப்பில லாமல் உழைப்பபை உண்டாக்கும். சில வகையில் கூட்டு முயற்சி இப்போது தான் உருவகத்திற்கு வந்திருக்கின்றன. சற்று வேகமாகப்போங்கள்; வெற்றி உங்களை நெருங்குகிறது. எதிலும் தயக்கம் இல்லாமல் செயற்படவும் அலுவலக சூழ்நிலையும் மற்றவர்களால் புகழப்படும். மற்றபடி குடும்பத்தில் இடையிடையே மருத்துவ செலவுகள் இருக்கும். கலைப்பிரிவு ஆண்,பெண்களுக்கு கௌரவப்பட்டம் மற்றவர்களால் பாராட்டு போன்றவை இருக்கும். பணம் பற்றாககுறை இல்லை. பட்டாடை, அணிகலன் சேர்க்கை உண்டாகும். இதில் பழைய ஆபரணம் வாங்குவதும் முக்கிய அம்சமாகும். கலைப்பொருட்கள் குடும்பத்திற்கு சேர்க்கையும் உண்டாகும். கணவன்,மனைவிஉறவு கவர்ச்சிகரமாகவே இருக்கிறது. திட்டங்களை துரிதப்படுத்துங்கள். தனம் கொடுக்கல் வாங்கல் குறித்தபடி கூடி வந்து விடும். கூட்டுத் தொழில் உள்ளவர்களுக்கு உடனிருப்பவர்கள் ஒத்துழைப்பு கணிசமான தன ஆதாயத்தை உண்டாக்கும். குடும்ப முன்னணி மனதிருப்தி அசையாப்பொருட்களை விற்பது போன்ற அவசியத்தைப் பெறுவர்.கணவன், மனைவி உறவு முணுமுணுப்பாக இருக்கும். சகோதர, சகோதரிகள் முன்னேற்றம் திருப்தியாக இருக்கிறது. உறவினர் வருகை குடும்பத்தில் அதிக செலவை உண்டாக்கும். தொழில் வழியில் குடும்பத்தில் தடையில்லை. நடுப்பகுதிக்கு மேல் தூரத்துச்செய்தி மகிழ்ச்சிகரமாக வரும். உத்தியோகத்திற்கு மனு போட்டிருந்தவர்கள் அழைப்பு வரும். உத்தியோகப் பிரிவு ஆண், பெண்களுக்கு விடுமுறை ஏற்பதும் வீண் செலவுகள் செய்வதும் தவிர்க்கமுடியவில்லை.

## துலாம்



**சித்திரை 3,4வது பாதம்-சுவாதி 4 பாதங்கள்-விசாகம் 1,2,3 பாதங்கள் வரை 9 பாதங்கள்**

இது விரயத்து குரு தான் என்றாலும் பாதகமில்லை. பாக்கியத்துச் சனி உங்களுக்கு பல வழி நன்மை செய்வான். அரசாங்க சம்பந்தமான மனிதர்களின் சந்திப்பு எழுத்து வகை உத்திரவுக்கு உதவியாக இருக்கும். வெற்றி மேல் வெற்றியிருக்கிறது. பதவி மாற்றமும் இடமாறுதலும் குறிப்பிடததக்கது. தனம் கொடுக்கல் வாங்கல் தன்னிறைவு இருக்கிறது. புது உடைகள் சேர்க்கையும் கௌரவச் செல வும் இருக்கிறது. புத்திரர், புத்திரியர்கள் நிலையில் பெருத்த முன்னேற்றத்தைக் காணும் காலம். சுப விஷயம் குறித்து கடிதங்களும் வாழ்த்துக்களும் வரும், பிரயாணம் குடும்பத்துடன் ஏற்பது தவிர்க்க முடியவில்லை. போட்டி, பந்தயம், விளையாட்டு போன்ற வகை ஆதாயம் இருக்கும். நீங்கள் எப்போதோ செய்த காரியத்தின் பிரதிபலன் மாதக் கடைசியில் மனச் சலனத்தை உண்டாக்கும். மாணவ, மாணவியர்களுக்கு நுட்பமான அறிவு வளர்ச்சியும் கல்வி மேன்மையும் இருக்கின்றன. வெளியூரில் இருந்து அன் பளிப்புப்பெறுவது, நாகரீகப் பொருள் வாங்குவது உடைகள் சேர்க்கை உண்டாகும். திருமணம் போன்ற சுபச்செலவுகள் இல்லை. என்றாலும் அவ்வழியில் முக்கிய ரூதர் உறவினர் களை சந்திக்கும் அவசிய செலவை உண்டாக்கும். சில சமயம் கௌரவக்குறைவான வார்த்தைகளும் உண்டாக் கும். இந்த நடுப்பகுதிக்கு மேல்தான் சனிக்கு சாரம் வேலை செய்யும் உறவில் அவ்வப்போது சிறு சிறு சச்சரவுகள் தலை தூக்கி, பின்னர் மறையும். புதிய வீடு, மனை போன்ற சாரு திரச் சொத்துக்களை வாங்கத் திட்டமிடுவார்கள். உடல் ஆரோக்கியம் நல்ல விதமாக காணப்படும். பொருளாதார உயர்வு ஏற்படுவதால் சிறு காலம் நோய்வாய்ப் பட்டிருந்த வர்களும் பரிபூரண ஆரோக்கியத்தை அடைவார்கள். மக்கள் வேண்டியிருக்கிறது. சகோதர,சகோதரிவகையில் மன திருப்தியான போக்கு இருக்கமுடியாது. புத்திரியர்கள் கல்வி மேன்மையிருக்கும். பொதுவாக குடும்பத்தின் சூழ்நிலை அமைதியாக இருக்கின்றன. குழந்தைகள் ஆரோக்கியம் கல்வி நிலையம் திருப்தியாக இருக்கின்றன. சிலர் நாகரீக வாகனம் குடும்ப வகைக்கு நாகரீகப் பொருட்கள் வாங்குவதும இருக்கின்றன.

## விருச்சிகம்



**விசாகம் 4 வது பாதம் அனுஷம் 4 பாதங்கள்-கேட்டை 4 பாதங்கள் வரை 9 பாதங்கள்**

நண்பர்கள் சிலர் உங்கள் புதிய முயற்சிக்கு ஊக்கமளிப்பவர்களாக இருப்பர். பெண்கள் குழந்தைகளுக்கும் புதுஉடைகள் சேர்க்கை நாகரீகப் பொருட்கள் குடும்பத்திற்கு சேர்க்கை மேலிடத்து அனுகூல உத்தரவு உங்களை உற்சாகப்படுத்துவதாக இருக்கிறது, குழந்தைகள், கல்வி உயர்வு குறிப்பிடத்தக்க அளவு இருக்கிறது. கடனிருந்தும் பாதிப்பு இல்லை. உங்கள் செயல்முறை மட்டும் துரிதப்படுத்தினால் போதும். அதன் பிறகு நடப்பதெல்லாம் விதி வழியே நடக்கும். சில சமயம் குடும்பத்தில் மட்டும் சிறு சிறு இடர்பாடுகள் உண்டு. அதனைப் படிப்படியே சீர்செய்து விடவும் முடியும். அதனால் ஆத்திரப்படவோ அதிர்ச்சியடையவோ வேண்டிய அவசியம் இல்லை. தொழில்வழி ஆதாயம் சில சமயம் குறிப்பிட்டதற்கு மேலேயும் இருக்கும். செவ்வாய் உங்கள் யோக அதிபதி என்றாலும் சாரத்தால் பலமற்றவனே. எனவே உறவின் முறையாருடன் சிலசமயம் கருத்து மோதலுக்கும் வாய்ப்பு இருக்கிறது. இது சகோதரவகையிலும் இருக்கலாம். எனவே சூழ்நிலையை சாதகமாக்கிக் கொள்ள வேண்டும். உத்தியோகப்பிரிவினருக்கு அலுவல கத்தல் பழைய பிரச்சினைகள் சில நன்மை தரக்கூடியதாக வும் இருக்கும் என்பதால் மேல்மட்ட மனிதர்களின் இத மான அணுகுமுறையால் இதனை சீர்செய்து கொள்ள லாம். உங்களுக்கு முன்பு ஏற்பட்ட தடைகளை விலக்கி விடடது, இதனால் இப்போது நன்மை பிறந்து இருக்கிறது. உங்கள் நாகரீக வாகனத்தை மாற்றுவது அல்லது புதுப்பிப் பதும் முக்கிய இடம்பெறும். நடுப்பகுதிக்கு மேல் எடுத்த தெல்லாம் காரிய தாமதம் ஆகிறது என அயர்வு கொள்ள வும் நமது கடமையை தொடர்ந்து நிறைவேற்றுவதில் கருத்துடன் இருக்கவேண்டும். நீங்கள் பல வேலைப் பிரச் சினைகளில் குடும்பத்துத்தேவைகளை நடுப்பகுதி முதலே தொழில் வகையில் மந்தப்போக்கு உருவாகும்.முன்பு செய்து வைத்த காரியங்கள் குறையாக நிற்கும். தனம் கொடுக்கல் வாங்கல் போக்கு தானாகவே மந்தகதியை அடையும். இந்தநேரத்தில் நல்ல நண்பர்கள் சிலரையும் இழக்க வேண்டி இருக்கலாம். குடும்ப உறவில் எதிர்பாரா துர்கரும செலவும் கூட இடம்பெற வாய்ப்பு உண்டு. பிரயாண செலவுகள் அதிக இருக்கும். அளவு தொழிலில் வேகமில்லை. இயந்திரம், வாகனம் தொழில் உள்ளவர்கள் நிதான போக்கை கடைப்பிடிப்பது நல்லது. கடனை கட்ட முடியாமல் வாகனம் விற்பது வேறுவழி செய்வதும் வேண்டாம். எதிரே இருக்கும் ஒரு உயர்வான நேரத்திற்கு தயார் ஆகுங்கள். இந்தநேரம் உங்களுக்கு ஆகாதவர்கள் கை ஓங்கி நிற்கலாம். ஆனால் உங்கள் கரம் விரைவில் உயர்த்தப்படும். சனி இலாபத்தைத்தான் தருவான். உத்தி யோகப்பிரிவி னருக்கும் அனுகூலப்பிரச்சினைகள் உருவாகும். இல்லற வாழ்க்கையில் புயல் ஓய்ந்து அமைதி தொடரும் காலமாக இருக்கிறது. உங்கள் செயல் மற்றவர்களால் குறை கூறப் பட்டது. இப்போது பராட்டை உண்டாக்கும். பழைய பாதிப்புக்களும் இப்போது குறைவு தான். செய்தொழில் வகையில் நாகரீக சீர் அமைப்பது, உங்கள் கூட்டு மனிதர் களின் ஒத்துழைப்பும் வந்த சூழ்நிலை வேகமாக இருக்கும். என்பதில் சந்தேகமில்லை.

## தனுசு



**மூலம் 4 பாதங்கள்-பூராடம் 4பாதங்கள் உத்தராடம் முதல் பாதம் வரை 9 பாதங்கள்**

உங்கள் கூட்டு மனிதர்கள் கவனத்தைத் தான் நீங்கள் கவரவேண்டும். சில சமயம் பிணக்குகள் தோன்றும். போட்டி, பந்தயம், விளையாட்டு போன்ற வகைகள் இடையிடையே ஆதாயமாகவே இருக்கும். கௌரவத்திற்கு ஆசைப்பட்டு பிறருக்கு கொடுக்கும் பணம் திரும்ப வராது. குழந்தைகள் ஆரோக்கியம் விருத்தியடையும. நீங்கள் உறவினர் வகையில் இப்போது இடைவெளி உடையவர்களாகவே இருக்கிறீகள். இதற்கு உங்கள் செயல் மருத்துவ சிகிச்சையும் அவசியமும் அவசரமும் ஆகும். குடும்ப வேலைகளை படிப்படியே பூர்த்தியாக்கிக் கொண்டு போகலாம். தூரத்து மனிதர்கள் தொழில் சம்பந்தமான ஒப்பநதத்திற்கு உறுதுணையாக இருப்பர். குடும்ப வகையில் வெகு காலமாக முடிக்க முடியாமல் தேங்கிக்கிடந்த சுப விஷயம் குறித்த சில நல்ல முடிவை இப்போது காணலாம். தொழில் சம்பந்தமான எழுத்து வேலைகள முடிக்கப் பெறும். சிலருக்கு அரசாங்க ஒப்பந்தங்கள் கூட வரும். உத்தியோகப் பிரிவினர்களுக்கு ஆரம்பத்தில் இருந்து வந்த சில நிகழ்ச்சிகள் சலனமாக இருந்தது. மந்திமப்பகுதிக்கு மேல் தீர்க்கப்பட்டு விடும். கீழ் மட்ட மனிதர்களும் தனக்கு சாதகமான சூழ்நிலையைப் பெறுவர். குடும்பத்தில் சிலருக்கு பாகப்பிரிவினை சம்பந்தமான பேச்சுக்களும் முக்கிய இடம் பெறும். இதில் மூன்றாவது மனிதரின் தலையீடு இல்லாமல் இருப்பது நல்லது. உங்கள் நாகரீக வாகனத்தை மாற்றுவ தும் உண்டாகும்.

## மகரம்



**உத்திராடம் 2,3,4வது பாதங்கள்-திருவோணம் 4 பாதங்கள்-அவிட்டம் 1,2 பாதங்கள் வரை 9 பாதங்கள்**

இம்மாத ஆரம்பம் சூரியன் நீசனாகி 10ல் கேதுவுடன் சேர்ந்தான். சுக்கிரன் நீசம்பெற்ற குருவுடன் பாக்கிய இல்லம் பெற்றது சிறப்பினும் சிறப்பாகும். நன்மைகள் இருக்கின்றன. வழக்கின் தன்மை இப்போதைக்கு வேகம் இல்லை. தான் பழைய பிரச்சினைகள் புதிய சிக்கலை உண்டாக்கும். எழுத்து உத்தரவு உங்களுக்கு எதிராகவும் அமையும். சில மாதம் ஓய்வு கொள்வதும் அவசியமாக இருப்பது உங்களை வெற்றியுடையவர்களாக ஆக்கும் வாகன வகையில் இருந்த சிக்கல் தீரகப்பட்டுவிடும். வழக்கு மூலம் தாமதப்பட்ட காரியங்களும் வெகு வேகமாக செயல் முறைக்குக் கொண்டு வந்துவிடலாம். தொழில் வழி புதுமைகளை பற்றி பேசுவது நன் முயற்சியும் உண்டாகும் சிலர் புதிய வாகனம் வாங்குவது, பழைய வாகனத்தை மாற்றியமைதல் அது வழியில் செலவுகளும் உண்டாகும் போட்டி, பந்தயம் விளையாட்டு போன்றவை முழு நன்மை தராது. குழந்தைகள் ஆரோக்கியம் கல்வி இந்த வகைகள் கவர்ச்சி மிக்கதாகவே இருக்கிறது. தூரத்துப்பிரயாணம் தடைப்படும். இநத இராசி பெண்களுக்கு பொதுவாகவே ஆரோக்கியப் பாதிப்பு உண்டாகும், அவசர செலவுகளும் இருக்கின்றன. சில காரியங்களில் சில சமயம் மூன்றாவது மனிதர்கள் கூடிப்பேசி சுமுகமான சூழ்நிலையை உருவாக்கத்தக்கதாக இருக்கும். சொல்லைக் காப்பாற்ற முடியாமை ஏற்படும். தூக்கம் குறையும். பண வகையில் மற்றவர்க்கு வேண்டிய ஈடுபாடும் அலைச்சலும் உண்டாகும். தொழில் வழியில் எவ்வளவு தான் வேகம் இருந்தாலும் ஆதாயம் குறைவுதான். அலைச்சல் , அகால உறக்கம், தேக உஷண அசௌகரியமும் உண்டாகும். அரசாங்க உயர் மட்ட மனிதர்களின் சந்திப்பு அவசர பிரச்சினைகள் முடிப்பதற்கு அவசியமாக இருக்கும். போட்டி, பந்தயம் ,விளையாட்டு போன்ற வழிகள் பிரகாசமாக இருக்கிறது. பல நெருக்கடி இருந்தாலும் காரியத்தடை இல்லை ஒப்பந்தம் ,கடித நன் மைகளும் உண்டு. புது உடைகள் சேரும் காலம் இது. விட் டுப்போன வழியில் சிந்தனை மிகுந்து இருப்பது குறிப் படத் தக்கது. வெளி வட்டாரத்தினர் உங்களுக்கு இணக்கமாக இருப்பது மனதிருப்தி அளித்தாலும் குடும்பத்தில் உள்ளவர்கள் உறவு வழியும் திருப்தியாக இருக்காது. நாகரீக வாகனச் செலவு வழக்குவழி செலவுகளும் உண்டாகும். முடிவு செய்த காரியத்தையும் கடைசி நேரத்தில் தள்ளிப்போட வேண்டியிருக்கும். கலைப்பிரிவு ஆண்,பெண்களுக்கு இதர பெண்களுக்கும் நம்பிக்கை தரும் நன்மைகள் இருக்கின்றன. காதல் கல்யாண முயற்சி ஆபரணங்கள் வாங்குவது இரகசிய கடிதம் எழுதுவதும் ஆகும். இயந்திரத்தொழில் வாகனம் வைத்து தொழில் நடத்துகிறவர்களுக்கு பிற்பகுதியில் எடுத்த காரியம் எல்லாம் வெற்றி வேகமான போக்கும் இருக்கும். அரசியல் வாதிகளுக்கு பிரச்சினைகள் மாத ஆரம்பத்தில் இருந்தே விட்டு விட்டு இருக்கும். குழந்தைகள் வகை சீதளப் பாதிப்பு மருத்துவச்செலவுகளும் உண்டாகும். மேலும், கௌரவ உயர்வு இருக்கும். இப்போது சிலர் பூமிப்பொருள் விற்று கட்டு மனையில் செல விடுதல் போன்றவை இருக்கும். தொழில் வழி அலைச்சல் மட்டும் இன்னும் உங்களை விடவில்லை. காலம் கடந்து உணவு கொள்வது,அகால உறக்கமும் இருக்கும். இதனால் ஆரோக்கிய பாதிப்பு உண்டாகி மருந்துண்பதும் இருக்கலாம். மலை ,வனம்சூழ்பிரதேச மனிதர்களின் தொடர்பு நெருங்கியதாக இருக்கும். (தொடரும்)

**சோதிடமேதை ராமன்**

தொட்டனைத் தூறும் மணற்கேணி
மாந்தர்க்கு
கற்றனை தூறும் அறிவு.
-குறள்

வலம்புரி

## யாழ்ப்பாணக் கல்வி வீழ்ச்சி காரணம் கண்டறியப்படுமா?

கடந்த வருடம் நடைபெற்ற ஐந்தாம் தர புலமைப்பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன. இப்பெறுபேறுகளின் அடிப்படையில் யாழ்ப்பாண மாவட்டத்தின் கல்விநிலை வீழ்ச்சி கண்டுள்ளது.

திருகோணமலை, கல்முனை, அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களின் பெறுபேறுகள் முதன்மை வகிப்பதாகக் காணமுடிகிறது.

யாழ்ப்பாணம் என்றால் அது கல்வியின் இருப்பிடம் என்று புகழப்பட்ட நிலைமை சடுதியாக மாற்றமடைந்திருப்பதன் காரணம் என்ன என்பது கண்டறியப்பட வேண்டும்.

பொதுவாக கடந்த சில வருடங்களாக க.பொ.த சாதாரணம், உயர்தரம் மற்றும் ஐந்தாந்தரப் புலமைப் பரீட்சைப் பெறுபேறுகள் யாழ்ப்பாணத்தில் வீழ்ச்சி கண்டு வருவதை புள்ளி விபரங்கள் உறுதிப்படுத்தியுள்ளன.

கடந்த யுத்த சூழ்நிலையிலும் கூட யாழ்ப்பாணத்துக் கல்விப் பெறுபேறுகள் உச்சம் கண்டிருந்த போதிலும் இன்றைய சமாதான சூழ்நிலையில் கல்வி வீழ்ச்சி கண்டிருப்பது வேதனைக்குரியது மட்டுமல்ல அதற்கான காரணங்களும் உடனடியாகக் கண்டறியப்பட வேண்டும்.

யுத்த சூழ்நிலையில், எதுவித அடிப்படை வசதிகளும் அற்ற நிலையில், குப்பி விளக்கில் படித்து அகில இலங்கையில் முதலிடத்தைப் பெற்ற யாழ்ப்பாணத்து மாணவர்கள் இப்போது கல்வியில் வீழ்ச்சி கண்டிருப்பது ஏன்?

வசதி வாய்ப்புக்கள் அவர்களின் கல்விக்குத் தடையாக உள்ளதா? அல்லது இன்ரநெற் பாவனை, தொலைக்காட்சிகளின் அதீத ஊடுருவல் போன்றவை மாணவர்களின் சிந்தனையை மாற்றிவிட்டதா? அல்லது யுத்தத்தின் தாக்கம் அவர்களின் மனநிலையைப் பாதித்துவிட்டதா? என்பவற்றிற்கு விடைகாண்பது அவசியமாகும்.

மாணவர்களின் கல்வி வீழ்ச்சி குறித்து வெறுமனே புள்ளிவிபரங்களுடன் பாடசாலை - ஆசிரியர் என்ற குறுகிய வட்டத்திற்குள் நின்று கல்வி அதிகாரிகள் தங்கள் கணிப்புகளைச் செய்வதற்கு அப்பால், பிறச் சூழல்கள் பற்றிய ஆய்வினை மேற்கொள்வது காலத்தின் கட்டாய தேவையாக உள்ளது.

அதுமட்டுமன்றி யாழ்ப்பாண மாணவர்களின் கல்வி வீழ்ச்சி அடைகிறதென்று குறைபட்டுக் கொள்வதை விடுத்து, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஐந்து கல்வி வலயங்களும் ஒன்று சேர்ந்து ஒரு முழுமையான ஆய்வினை மேற்கொண்டு கல்வி வீழ்ச்சிக்கான காரணங்களைக் கண்டறிவதுடன் அதற்கான பரிகாரத்

# பேச்சுவார்த்தைகளின் தாமதத்திற்கு அரசியல் நெருக்கடி காரணமல்ல

## இப்படிக் கூறுகிறார் சமாதானப் பேரவை பணிப்பாளர்

(கொழும்ப)

பிரதமர் ரணில்விக்கிரமசிங்கவினால் முன்னெடுக்கப்பட்டு வந்த சமாதான நடவடிக்கைகள் இடை நிறுத்தப்பட்டமைக்கு தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள ஆரசியல் நெருக் கடி நிலையை மட்டும் காரணம் காட்ட முடியாது.

தமிழ்-முஸ்லிம் கட்சிகளிடையே நிலவும் ஒற்றுமையின்மையினாலும் சமாதான நடவடிக்கைகள் தாமதமடைகின்றது என சமாதானப் பேரவைப் பணிப்பாளர் எஸ். பாலகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினால் நடாத்தப்பட்டு வரும் விடியும் வேளை நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து இது பற்றிக் கூறுகையில்,

சமாதான நடவடிக்கைகள் தொடர்ந்தும் வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டுமானால், அனைத்து தமிழ் கட்சிகளும் ஒன்றிணைந்து "சமாதானப் பேச்சுவார்த்தை முலமாகவே தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டும்" என்று அழுத்தத்தை பேரினவாதக் கட்சிகளுக்கு கொடுக்க வேண்டும்.

இதற்கு தமிழ்க் கட்சிகள் மட்டும் ஒன்றிணைந்தால் போதாது முஸ்லிம்கள் மற்றும் மலையக தமிழர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து ஒரு குடையின் கீழ் நின்று தமிழ் பேசும் மக்களின் உரிமைகளைப் பெற்றுக்கொடுக்க முன்வர வேண்டும்.

இதேவேளை, அரசியல் இலாபங்களுக்காக சில அரசியல் கட்சிகள் கூட்டிணைந்து விட்டு, பின்னர் தங்களின் சுயரூபங்களை வெளிப்படுத்த ஆரம்பித்துவிடுகின்றன.

இத்தகைய ஒரு நோக்கத்துடனேயே ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும், ஜே.வி.பி.யும் கூட்டுச் சேர்ந்திருக்கின்றன. மக்களின் நலன் கருதி கூட்டுச் சேருவதாகக் கூறிக்கொண்டு அதிகாரங்களை கைப்பற்றி சிறுபான்மையினத்தவர்களை நசுக்குவதே இவர்களின் முக்கிய நோக்கம்.

இத்தகைய தீய நோக்கங்களுடன் கூட்டுச் சேருகின்ற கட்சிகளால் சமாதானத்திற்கு மென்மேலும் ஆபத்து ஏற்படுமே தவிர, மக்களின் அபிலாஷைகள் நிறைவேற்றப்பட மாட்டாது.

அத்துடன் இத்தகையை ஒற்றுமையை விரும்பும் எந்தவொரு கட்சியையும் கூட்டுச் சேர்க்கக் கூடாது அதனைத் தடுத்து நிறுத்தவேண்டும்

இதேவேளை, மலையக மக்களின் நலனில் இந்திய அரசாங்கமோ அல்லது இலங்கை அரசாங்கமோ அக்கறை காட்டாதிருப்பது கவலைக்குரிய விடயமாகும்.

இலங்கையில் உள்ள பேரினவாத சக்திகளுக்கு அடிமைகளாக இந்தியாவினால் விற்கப்பட்ட மலையக மக்கள் இன்று பல்வேறு இன்னல்களை அனுபவித்து வருகின்றனர். இவர்களின் உரிமைகள் நசுக்கப்படுகின்றதுடன் வறுமையாலும் வாடுகின்றனர்.

மலையக மக்களில் விரல் விட்டு எண்ணக் கூடியவர்களே உயர் கல்வி வாய்ப்பை பெற்றிருக்கின்றார்கள், ஏனையவர்கள் வறுமைகாரணமாக கூலித் தொழிலிலேயே ஈடுபடுகின்றனர்.

இந்நிலையில் அங்குள்ள அரசியல் கட்சிகள் தமது மக்களின் அவல வாழ்வைக் கண்டும் காணததுமாக இருந்து வருகின்றதுடன் அவர்களை அடிமை வாழ்வில் இருந்து காப்பற்றத் தவறியுள்ளன என்றும் கவலை தெரிவித்தார்.

(தி-60,10)

## வலி.வடக்கு கடற்றொழிலாளர் சமாசம் அங்குரார்ப்பணம்

(திருநெல்வேலி)

பதினொரு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களை ஒன்றிணைத்து, "வலி-வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்" என்ற புதிய அமைப்பொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி திக்கம் சந்திக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள இச்சமாசம், நேற்று முன்தினம் கடற்றொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர் எஸ்.ஏ.யோசெப்பினால் வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந் நிகழ்வில், மாவட்ட கடற்றொழில் பரிசோதகர் கே.தர்மலிங்கம் மங்கள விளக்கை ஏற்றிவைத்தார். இதன் பெயர்ப் பலகையை கடற்புலிகளின் வடமராட்சிப் பொறுப்பாளர் சி. அன்பழகன் திரைநீக்கம் செய்து வைத்தார்.

இவ் வலி-வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் தலைவராக எம்.பயஸ் லோகதாஸும், செயலாளராக என்.ரட்ணராஜாவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இத் திறப்பு விழா நிகழ்வில், வடமராட்சி கடற்றொழிலாளர் சங்கம் மற்றும் வலிகாமம் கடற்றொழிலாளர் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகளும், உலக உணவு ஸ்தாபன அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (தி-43)

# இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் புதிய கூட்டுக்கு அக்கறை இல்லை

## முஸ்லிம் காங்கிரஸ் குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கையின் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி-ஜே.வி.பி. கூட்டு முன்னணி போதிய கவனம் செலுத்தத் தவறிவிட்டதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

இக்கூட்டு முன்னணியின் உடனபடிக்கையை விடுதலைப் புலிகள் நிராகரித்துள்ள நிலையில், இனபபிரச்சினைத் தீர்வு விவகாரத்தில் முன்னணியினால் உருபபடியாக எதனையும் களைப் புறக்கணித்துவிட்டு தென்னிலங்கை அரசியலிலேயே புதிய கூட்டு முன்னணி கவனம் செலுத்தியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

மத்தியிலிருந்து பிராந்தியங்களுக்கு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்பதே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நிலைப்பாடாகத் தொடர்ந்து இருந்து வருவதாகக் குறிப்பிட்ட ஹசன் அலி, தற்போது தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்

கொள்வதை விடுத்து, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஐந்து கல்வி வலயங்களும் ஒன்று சேர்ந்து ஒரு முழுமையான ஆய்வினை மேற்கொண்டு கல்வி வீழ்ச்சிக்கான காரணங்களைக் கண்டறிவதுடன் அதற்கான பரிகாரத்தையும் தேடிக்கொள்ள வேண்டும்.

அதேவேளை திருகோணமலை, கல்முனை, அம்பாறை போன்ற மாவட்டங்களின் கல்வி உயர்வுக்குக் காரணம் என்ன என்பதும் கண்டறியப்பட வேண்டும். அங்குள்ள மாணவர்கள் கல்வியில் காட்டும் ஆர்வத்திற்குக் காரணமாக அமைந்துள்ள புறச்சூழ்நிலைகள், யாழ்ப்பாணத்தில் இல்லையா? அல்லது அந்த மாவட்டங்களில் நடைபெறுகின்ற பரீட்சைகள் - மேற்பார்வைகள் போன்றவை சீரற்றுள்ளனவா? என்பனவும் அறியப்பட வேண்டிய விடயங்களாகும்.

யாழ்ப்பாண மாவட்டத்தைப் பொறுத்தவரை பரீட்சைகள் பரீட்சைகளாகவே நடத்தப்படுகின்றன. பரீட்சையில் குளறுபடிகள் என்ற பேச்சுக்கே யாழ்ப்பாணத்தில் இடம் இல்லை. பரீட்சை மேற்பார்வையாளர்கள் தங்கள் கடமையில் மிக இறுக்கமான போக்கைக் கடைப்பிடித்து செம்மையாகப் பரீட்சை நடைபெறுவதை உறுதி செய்கின்றனர்.

ஆனால், கல்வியில் முதல்நிலை வகிக்கும் கல்முனை போன்ற மாவட்டங்களில் 5ம்தர புலமைப்பரீட்சை வினாத்தாள்கள் பரீட்சைக்கு முன்னராக வெளியாகி இருந்த செய்திகள் அறியப்பட்டுள்ளன.

எனவே இது பற்றிய ஓர் முழுமையான ஆய்வுகள் முன்னெடுக்கப்படும்போதே யாழ்ப்பாணக் கல்வியின் தரநிலை பற்றிச் சரியான கருத்தைக்கூற முடியும்.

விடயத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி-ஜே.வி.பி. கூட்டு முன்னணி போதிய கவனம் செலுத்தத் தவறிவிட்டதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

இக்கூட்டு முன்னணியின் உடன்படிக்கையை விடுதலைப் புலிகள் நிராகரித்துள்ள நிலையில், இனப்பிரச்சினைத் தீர்வு விவகாரத்தில் முன்னணியினால் உருப்படியாக எதனையும் சாதிக்க முடியாது என மஸ்லிம் காங்கிரஸ் வட்டாரங்கள் மேலும் கூறியுள்ளன.

இதுகுறித்து கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்குக் கருத்து வெளியிட்டுள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஹசன் அலி, இலங்கையின் வடக்குக், கிழக்குச் சார்ந்த பிரச்சினை

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

எங்கெல்லாம் கொள்ளை நோய் பரவுகிறதோ, பஞ்சம் ஏற்படுகிறதோ, மக்கள் துன்பத்தில் வாடுகிறார்களோ அங்கெல் லாம் நீங்கள் அனைவரும் சென்று அவர் களுடைய துன்பத்தைக் குறைக்க முயற்சி செய்யுங்கள். மிஞ்சிப் போனால் இந்த முயற்சியில் அதிகப்பட்சம் நீங்கள் உயிரிழக்க நேரிடலாம் அதனால் என்ன! உங்களைப் போல எத்தனை எத்தனையோ பேர் நாள் தோறும் புழுக்களைப் போலப் பிறப்பதும் இறப்பதுமாக இருக்கிறார்கள். மேலானதொரு குறிக்கோளுக்காக வாழ்ந்து, இறந்து போவது மிகவும் சிறந்தது.

**சுவாமி விவேகானந்தர்**

தெரிவித்துள்ளார்.

மத்தியிலிருந்து பிராந்தியங்களுக்கு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்பதே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நிலைப்பாடாகத் தொடர்ந்து இருந்து வருவதாகக் குறிப்பிட்ட ஹசன் அலி, தற்போது தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதே கட்சியின் நிலைப்பாடு என்றும் தெரிவித்துள்ளார்.

சமாதானத்துக்கான மக்களாணையைப் பெற்றுள்ள ஜனாதிபதியும் பிரதமர் ரணில்விக்கிரமசிங்கவும் தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் ஹசன் அலி வேண்டுகோள் விடுத்துள்ளார். (த)

## நற்கருணைப் பணியாளர்களாக பொதுநிலை விசுவாசிகள் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கத்தோலிக்க மறை மாவட்ட வரலாற்றில் முதல் தடவையாக பொதுநிலை விசுவாசிகள் மூவர் நற்கருணைப் பணியாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

யாழ். ஆயர் கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையினால் நேற்றுக்காலை யாழ். அடைக்கல அன்னை ஆலயத்தில் நடைபெற்ற விசேட திருப்பலியைத் தொடர்ந்து இந்நியமனம் வழங்கப்பட்டது.

அடைக்கல மாதா ஆலயத்தைச் சேர்ந்த ஏ.எஸ்.அகஸ்ரின், என்.பெனடிக், ஈ.கே. இராசநாயகம் ஆகியோரே நற்கருணைப் பணியாளராக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதில் திருவழிபாட்டு இயக்குநர் அருட்திரு ஜெபரட்ணம் அடிகளார் பல குருக்கள், கன்னியர்கள் மற்றும் இறைமக்களும் கலந்து கொண்டனர். (தி-16)

## பொன் விழா

(தாவடி)

வண்ணை சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய சைவசமய அபிவிருத்திக் கழகத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவு விழா எதிர்வரும் 28 ஆம் திகதி புதன்கிழமை கொண்டாடப்படவுள்ளது.

(தி-17)

## காயம்

(கொழும்புத்துறை)

மோட்டார் சைக்கிளும் காரும் விபத்துக்குள்ளானதில் இருவர் காயமடைந்து யாழ்போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று மதியம் நாவற்குழி கேரதீவு வீதியில் இடம்பெற்ற இச் சம்பவத் தின் போது. நாவற்குழியைச் சேர்ந்த க.அருளானந்தம் (வயது26) அ.சுதர் சனன் (வயது 30) ஆகிய இருவருமே காயமடைந்தவர்களாவர். (ச-51)

(யாழ்ப்பாணம்)

தென்னைமரத்தில் ஏறிய போது தவறிவிழுந்ததில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்று மாலை ஆறுகால் மடத் தில் இடம்பெற்ற இச் சம்பவத்தின் போது அதே இடத்தைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான மா. தவக்குமார் என்பவரே காய மடைந்தவராவார். (ச-1)

## மோட்டார்...

நெல்லியடிப் பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இதே வேளை நேற்று முன்தினம் மாலை நெல்லியடிப் பேருந்து நிலையத்தில் இடம் பெற்ற விபத்துச்சம்பவத்தில் யுவதி ஒருவர் உயிரிழந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (த-35,52)

## பருத்தித்துறையில் கோஷ்டி மோதல்

(திருநெல்வேலி)

பருத்தித்துறை நகாப் பகுதியில் இரு குழுக்களுக்கிடையே இடம் பெற்ற மோதலையடுத்து அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டது.

நேற்று மாலை இரண்டு விளை யாட்டுக் கழகங்களுக்கிடையே ஏற்பட்ட மோதலையடுத்தே அங்கு பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது.

இதனையடுத்து பொலிஸ் மற்றும் இராணுவத்தினர் குவிக்கப் பட்டு நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. (ச-43)

## இராணுவ...

இதேவேளை ஆயுதக்களஞ் சியம் மீதான சோதனை மேற் கொள்ள தனிநபர் ஆணைக்குழு ஒன்றை ஜனாதிபதி நியமித்திருந்தார்.

இவ்விசாரணைக்குழு தனது விசாரணை அறிக்கையை ஜனா திபதியிடம் சமர்ப்பித்திருந்தது. ஜனாதிபதி இவ்வறிக்கையைச் சட்ட மா அதிபருக்கு அனுப்பியிருந்தார்.

அவ்விசாரணையறிக்கையில் ஆயுதக் களஞ்சியம் மீது சோதனை நடத்திய இராணுவ மற்றும் பொலிஸ் அதிகாரிகள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. (தி-60,10)

## மூன்று முக்கிய...

நெருக்கடிகளை நாம் எதிர் நோக்க வேண்டி ஏற்படும்.

2002ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22ம் திகதி விடுதலைப் புலிகளுடன் யுத்தநிறுத்த உடன்படிக்கை செய்யப் பட்ட போது ஜனாதிபதி தன் வசமாக் கிக் கொண்ட மூன்று அமைச்சுக் களும் எமது வசமிருந்தது. இதனால் யுத்தநிறுத்த உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவது சுலபமாக இருந்தது. இன்று அமைச்சுப் பொறுப்புக்கள் ஜனாதிபதியிடம் இருப்பதனால் யுத்தநிறுத்த உடன்படிக்கையை அமுல் செய்வது கஷ்டமாக உள்ளது.

இந்நிலையில் ஜனாதிபதிக்கும், எனக்குமிடையில் ஏற்பட்டுள்ள முரண்பாடுகளை தீர்க்க முடியாது போயுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைக்குத் தயாராக இருந்த போதும் அரசாங்கம் அதற்குத் தயாராக இல்லை. இதனால் சமாதானம் கேள்விக் குறியாக உள்ளது.

அடுத்த மாதம் 17ம் திகதி வாஷிங்டனில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டுக்கு முன்னர் ஜனாதிபதி தன்வசமாக்கிக் கொண்ட மூன்று அமைச்சக்களையும் மீண்டும் அரசிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் ஜனாதிபதியிடம் பிரதமர் கோரிக்கை விடுத்தார். (ம)

### ஸ்ரீ.சு.க.-ஜே.வி.பி கூட்டு

# இரு கட்சிகளுமே விளைவுகளை பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும்

## ஜோசப் பரராஜசிங்கம் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையே செய்து கொள்ளப்பட்டுள்ள கூட்டு ஒப்பந் தம் சமாதான நடவடிக்கைகளைப் பாதிக்குமானால் அதன்பின்னர் ஏற்படும் விளைவுகளையும் சம்பந் தப்பட்ட இரு கட்சிகளுமே ஏற்க வேண்டும் என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் யோசப் பரராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

அண்மையில் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு விஜயம் செய்த பிரித்தானிய தூதரக அதிகாரி களை நாடாளுமன்ற உறுப்பினர் யோசப் பரராஜசிங்கம் சந்தித்துப் பேசியபோதே இதனைத் தெரிவித் தார்.

அவர் அங்கு இதுபற்றித் தொடர்ந்து கூறுகையில்,

அரசுக்கும் விடுதலைப் புலி களுக்கும் இடையே கைச்சாத் திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத் தின் பின்னர் தமிழ், முஸ்லிம் மக் கள் போர் அச்சமின்றி நிம்மதியாக வாழ்ந்து வந்தனர். சமாதானப் பேச்சுவார்த்தைகளும் அரசினால் ஆரம்பிக்கப்பட்டு முன்னேற்றப் பாதையைநோக்கி நகர்ந்தன.

இந்நிலையில் சமாதான நடவடிக்கைகளுக்கு தடை போடும் வகையில் பேரினவாத சக்திகளின் தூண்டுதலின் பேரில் ஜனாதிபதி யால் 3முக்கிய அமைச்சுக்கள் பொறுப்பேற்கப்பட்டன.

இதனால் சமாதான நடவடிக் கைகளைத் தொடர்ந்தும் முன னெடுத்துச் செல்ல முடியாத நிலை அரசிற்கு ஏற்பட்டது.

இத்தகைய நெருக்கடியான நிலையில் சமாதான நடவடிக்கை ளக் குழப்பி தமிழர்களுக்கு எதிராக செயற்பட்டு வந்த ஜே.வி. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடன் கூட் டுச் சேர்ந்திருக்கின்றது.

மேற்படி இரு கட்சிகளும் இணைந்து உருவாக்கிய இக்கூட்டு அமைப்பானது சமாதான நடவடிக் கைகளை பாதிக்கக்கூடிய வகை யில் செயற்படுமானால் அதன் பின்னர் ஏற்படும் விளைவுகளை இரு இக்கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் இரு கட்சிகளுமே ஏற் றுக்கொள்ள வேண்டும் என்றார். (தி-64,10)

## சட்டம், ஒழுங்கை...

பெருவெற்றி கண்டுள்ளது. எமது தலைவர் இலங்கை இராணுவத்துக்கு எதிரான பெரிய யுத்தத்தை மட்டும் செய்ய வில்லை. எங்களுடைய பிரதேசங் களையும், மக்களையும் எதிரியுடைய ஆக்கிரமிப்பில் இருந்து விடுவித் துக்கொண்டு அவர்களுடைய செழுமையான வாழ்வுக்குரிய நடவ டிக்கைளையும் அக்கறையுடன் மேற்கொண்டு வந்துள்ளார்.

நீதி நிர்வாகத் துறையை நாம் ஆரம்பித்த போது பலஅச்சங் களுக்கு முகம் கொடுக்க வேண் டியிருந்தது பலர் சந்தேகக் கண் கொண்டு பார்த்தார்கள். ஆனால் இன்று எல்லோராலும் அந்தத் துறை பாராட்டப்பட்டுவருகிது.

கடந்த காலங்களில் சட்டம் ஒழுங்கைப் பேணுகின்றவார்கள் மீது எமது மக்கள் வெறுப்படைந்து இருந்தார்கள். இனவாதம் பல்வேறு முனையிலும் இருந்து எமது மக்களை தாக்கி வந்தது. மக்களின் ஆதங்கங்களை மனதில் கொண்டுதான் நாம் இக் கட்டமைப்பை ஏற்படுத்தினோம்.

இதற்காக நாம் ஆரம்பத்தில் இருந்து எமது போராளிகளையே நீதியாளர்களாகவும் சட்டவாளர்க ளாகவும் தேர்ந்தெடுத்து அவர்க ளைப் பயிற்றுவித்தோம்.

மக்கள் மத்தியில் உண்மை யான, நேர்மையான, சமத்துவ மான நீதிவழங்கலை ஸ்தாபிக்க வேண்டும் என்பதே எமது தலை வரின் நோக்கமாக இருந்தது.

எனவே நீதியை நிலைநாட்ட, நீதி யைப்பேண அதற்காக உங்களை அர்ப்பணித்து உழைக்க வேண்டும். இலங்கையின் சட்டவாளர்களில் பணத்துக்காக சுயநலநோக்குடன் செயற்படுகின்றவர்கள் பலர் உள்ளனர். அர்ப்பணிப்புள்ள ஒரு சிலரும் உள்ளனர். ஆனால் எமது சட்டவாளர்கள் உயர்நோக்கம், உயர் விழுமியங்களைக் கொண்டவர்களாக உள்ளனர் என்றும் தமிழ்ச்செல்வன் தெரி வித்தார். (ம)

## ஸ்ரீ.சு.க...

நான்காவதாக உருவாக்கப்பட்ட இக்கூட்டணி ஐ.தே.மு அரசை கவிழ்ப்பதற்கென்றே உரு வாக்கப்பட்டுள்ளது. முன்னர் உருவாக்கப்பட்ட இத்தகைய கூட்டணிகளில் ஒன்று மறைந்த விஜயகுமாரதுங்கவின் சவப்பெட்டி யின் மேலேயே ஜனாதிபதியால் உருவாக்கப்பட்டது என்று ராஜித சேனாரட்ன தெரிவித்தார். (ச-6)



## மூன்று முக்கிய...

நெருக்கடிகளை நாம் எதிர் நோக்க வேண்டி ஏற்படும்.

2002ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22ம் திகதி விடுதலைப் புலிகளுடன் யுத்தநிறுத்த உடன்படிக்கை செய்யப்பட்ட போது ஜனாதிபதி தன் வசமாக்கிக் கொண்ட மூன்று அமைச்சுக்களும் எமது வசமிருந்தது. இதனால் யுத்தநிறுத்த உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவது சுலபமாக இருந்தது. இன்று அமைச்சுப் பொறுப்புக்கள் ஜனாதிபதியிடம் இருப்பதனால் யுத்தநிறுத்த உடன்படிக்கையை அமுல் செய்வது கஷ்டமாக உள்ளது.

இந்நிலையில் ஜனாதிபதிக்கும், எனக்குமிடையில் ஏற்பட்டுள்ள முரண்பாடுகளை தீர்க்க முடியாது போயுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைக்குத் தயாராக இருந்த போதும் அரசாங்கம் அதற்குத் தயாராக இல்லை. இதனால் சமாதானம் கேள்விக் குறியாக உள்ளது.

அடுத்த மாதம் 17ம் திகதி வாஷிங்டனில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டுக்கு முன்னர் ஜனாதிபதி தன்வசமாக்கிக் கொண்ட மூன்று அமைச்சக்களையும் மீண்டும் அரசிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் ஜனாதிபதியிடம் பிரதமர் கோரிக்கை விடுத்தார். (ம)

ஆரம்பித்த போது பலஅச்சங்களுக்கு முகம் கொடுக்க வேண்டியிருந்தது பலர் சந்தேகக் கண் கொண்டு பார்த்தார்கள். ஆனால் இன்று எல்லோராலும் அந்தத் துறை பாராட்டப்பட்டுவருகிது.

கடந்த காலங்களில் சட்டம் ஒழுங்கைப் பேணுகின்றவார்கள் மீது எமது மக்கள் வெறுப்படைந்து இருந்தார்கள். இனவாதம் பல்வேறு முனையிலும் இருந்து எமது மக்களை தாக்கி வந்தது. மக்களின் ஆதங்கங்களை மனதில் கொண்டுதான் நாம் இக் கட்டமைப்பை ஏற்படுத்தினோம்.

இதற்காக நாம் ஆரம்பத்தில் இருந்து எமது போராளிகளையே நீதியாளர்களாகவும் சட்டவாளர்களாகவும் தேர்ந்தெடுத்து அவர்கள் உள்ளனர். அர்ப்பணிப்புள்ள ஒரு சிலரும் உள்ளனர். ஆனால் எமது சட்டவாளர்கள் உயர்நோக்கம், உயர் விழுமியங்களைக் கொண்டவர்களாக உள்ளனர் என்றும் தமிழ்ச்செல்வன் தெரிவித்தார். (ம)

---

## ஸ்ரீ.சு.க...

நான்காவதாக உருவாக்கப்பட்ட இக்கூட்டணி ஐ.தே.மு அரசை கவிழ்ப்பதற்கென்றே உருவாக்கப்பட்டுள்ளது. முன்னர் உருவாக்கப்பட்ட இத்தகைய கூட்டணிகளில் ஒன்று மறைந்த விஜயகுமாரதுங்கவின் சவப்பெட்டியின் மேலேயே ஜனாதிபதியால் உருவாக்கப்பட்டது என்று ராஜித சேனாரட்ன தெரிவித்தார். (ச-6)

இதனால் சமாதான நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் முனனெடுத்துச் செல்ல முடியாத நிலை அரசிற்கு ஏற்பட்டது.

இத்தகைய நெருக்கடியான நிலையில் சமாதான நடவடிக்கைளக் குழப்பி தமிழர்களுக்கு எதிராக செயற்பட்டு வந்த ஜே.வி.பி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடன் கூட்டுச் சேர்ந்திருக்கின்றது.

மேற்படி இரு கட்சிகளும் இணைந்து உருவாக்கிய இக்கூட்டு அமைப்பானது சமாதான நடவடிக்கைகளை பாதிக்கக்கூடிய வகையில் செயற்படுமானால் அதன் பின்னர் ஏற்படும் விளைவுகளை இரு இக்கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் இரு கட்சிகளுமே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றார். (தி-64,10)


சங்குநாதம்

அகாஷியின் முயற்சி வெற்றி தருமா? டொறிங்டன்

யாழ்ப்பாணத்தில் நடிகர் மணிவண்ணன் சதீபன்

கணவனைக் கொன்றவர்களுடன் கூட்டு விதுரன்

நாட்டில் சண்டையா? சமாதானமா? முடிவு சிங்கள மக்களிடம் ஜெயன்

ஆலடி மாநாடு

வியாசரின் பதில்கள்




கே.வி.குணசேகரம் எழுதும் கல்தூண்கள்... (தொடர்கதை)

திங்கள் வைகறையில் உங்கள் உள்ளங்களில் ஒலிப்பது

மற்றும் பல அம்சங்களுடன் வாசிக்கத் தவறாதீர்கள்

சங்குநாதம்

விலை ரூபா.16.00



இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனததாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.01.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.